சிவமயம்

# குமரகுருபரன்

மலர் 28] மாசி மீ 1-ம் உ (12-2-7?) [இதழ் 2



தனிப் பிரதி 60 பைசா வருடச் சந்தா ரூ. 7—00

## ஆசிரியர் குழு

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச். விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A. L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர், சென்னை-86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்.


## உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சைவ சமயத்தின் மாண்பு (8) | ... | 83 |
| 2. | அருள்மொழி அமுது | ... | 90 |
| 3. | கம்பர் இயற்றிய சரஸ்வதி அந்தாதி | — | 98 |
| 4. | அலங்கார நாயகன் (27) | .... | 102 |
| 5. | சேக்கிழாரும் சேயிழையார்களும் (7) | ... | 108 |
| 6. | இது சரியா? (2) | ... | 114 |
| 7. | கட்டாய ஓய்வு | .... | 120 |
| 8. | நான் கண்ட இளந்துறவி | ... | 125 |

உ

திருவருள் துணை.



# குமரகுருபரன்

மலர் 28 | நள ௵ மாசி மீ 1௳ [12—2—77] | இதழ் 2

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

## சைவ சமயத்தின் மாண்பு 8

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

கிடாரி என்பது கன்று போடாத பசு. பாலஸ்தீன் நாட்டில் சாணியைச் சுட்டு எரிப்பதற்குரிய உமியோ விறகுச் சுள்ளிகளோ, கிடையாதாகையால், ஒரு மாட்டைக்கொன்று

அதன் தோலையும், மாமிசத்தையும் இரத்தத்தையும் உதவி யாகக் கொண்டு அதன் சாணியைச் சாம்பலாக்கினுர்கள். பின்னர் அதனை ஒரு சுத்தமான இடத்தில் பத்திரப் படுத்தி வைத்து, தீட்டுக்கழிக்கவும், சுத்தப்படுத்தவும், பாவத்தைப் பரிகரிக்கவும் உபயோகப்படுத்தும்படி கர்த்தர் (கடவுள்) நியமப் பிரமாணமாகக் கற்பித்திருக்கிறுர்.

அல்லாமலும், ''ஈசோப்'' என்பது ஆங்கிலத்தில் (Hyssop)ஹிஸ்ஸோப் என்ற வார்த்தையைக் குறிப்பதாகும். இந்துக்கள் தீட்டுக் கழிப்பதற்காக உபயோகப்படுத்துகிற தர்ப்பைப் புல்லானது சமஸ்கிருதத்தில் ''குஷம்'' என்று சொல்லப்படுகிறது. அந்த குஷம் என்ற வார்த்தையே மருவி ஆங்கிலத்தில் Hyssop என்று ஆகியிருக்கிறது. பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தவர்கள் அதனை அறியாது சுத்தப் படுத்துவதற்கு உபயோகப்படுத்தப்படும் எத்தனையோ வித மான சோப்புகளில் ஒரு சோப்பாகக் கருதுமாறு ''ஈசோப்'' என்று மொழிபெயர்த்தார்கள் போலும்!.

இவற்றிலிருந்து, திருநீற்றைத் தீட்டுக் கழிப்பதற்காகவும் பாவத்தைப் போக்குவதற்காகவும் உபயோகப்படுத்துகின்ற பழக்கமும், வழக்கமும் தொன்றுதொட்டே உலகெங்கும் இருந்திருக்கிறதென்று தெளிவாகின்றதல்லவா? மேலும் பைபிளில் யோனு ஆகமம், அதிகாரம் 3ல், ''அவரவர் தம் பொல்லாத வழியையும், தத்தம் கைகளில் உள்ள கொடுமை யையும் விட்டுத்திரும்ப வேண்டுமானுல் உபவாசம் இருந்து இரட்டு உடுத்திக்கொண்டு (தூய ஆடை தரித்துக்கொண்டு) சாம்பலில் உட்கார்ந்து (மேலெல்லாம் கிடாரியின் சாம்பலான விபூதியைப் பூசிக்கொண்டு.) தேவனை நோக்கி உரத்த சப்த மாய் பிரார்த்திக்க வேண்டும்'' என்றும் விளக்கமாகக் கூறு கின்றது.

அடுத்து, இயேசுநாதர் லூக்கா சுவிசேஷம் அதிகாரம் 10 வசனம் 13ல் கீழ்வருமாறு கூறியிருக்கிறுர். ''உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும், சீதோனிலும்

செய்யப்பட்டிருந்ததானல், அப்பொழுதே இரட்டு உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பி இருப்பார்கள்.''

எனவே, இவற்றிலிருந்து, விபூதியை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு பிரார்த்தனை செய்கின்ற பழக்கவழக்கம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாலஸ்தீன் போன்ற பிறநாடுகளில் இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவாகின்றதல்லவா ? கிறித்துவ வேதப் புத்தகத்தில், பரமண்டலத்தில் இருக்கிற தேவன் கட்டளைப்படி தயாரிக்கப் பெற்றதும், இயேசுநாதரின் ஆமோதிப்பைப் பெற்றதுமான திருநீற்றை கிறித்துவர்கள் போற்றி அணிய வேண்டியதிருக்க, அதனைத் தூற்றி அவமரியாதை செய்தல் பெரியதொரு குற்றமும், பாவமும் ஆகும்

## 4. திருநீறு சுத்தம் செய்யும்

இதற்கு முன்னர் கூறிய மூன்று முறைகளிலும் திருநீறு எல்லாவித நாற்றத்தையும் போக்கி, தொத்துநோய்க் கிருமிகளையும் கொன்று, எல்லாவித திட்டுக்களையும் போக்கி உடலையும், வீட்டையும் தூய்மைப்படுத்துகின்ற உண்மை உறுதியாகிறது. அதனுலேயே, ஞானசம்பந்தப் பெருமான் தனது தேவாரத்தில், ''துயிலைத் தடுப்பது நீறு — சுத்தமதாவது நீறு'' என்று பாடி அருளியிருக்கிறுர்.

## 5. திருநீறு வியாதிகளைப் போக்கும்

திருநீறு வியாதிகளைப் போக்கும் என்பதற்கு, ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகம் பாடி, வெப்பு நோயினுல் துன்புற்றுக்கொண்டிருந்த கூன்பாண்டியனது உடம்பில் திருநீற்றைப் பூசி, அந்நோயைக் குணப்படுத்தினுர் என்பது நல்ல சான்ருகும். மேலும் ஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் தங்கியிருந்த நமது மதுரை ஆதீனத் திருமடாலயத்தில், இப்போதும் 291வது குருமகா சன்னிதானம் அவர்கள் அளித்துவருகின்ற பூஜைவிபூதி — பலரின் வியாதிகளைத் தீர்த்துவருகின்றது என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. உதாரணமாக ஒன்றை எடுத்துக்கொள்ளலாம். நமது

திருமடாலயத்திற்கு அருகில் உள்ள ஜடாமுனி கோயில் மேலைச் சந்தில் ஒரு அம்மையார் பல்லாண்டுக் காலமாக "பாண்டு" வியாதியால் துன்புற்று வந்தார்கள். பெரிய டாக்டர்களாலும் குணப்படுத்த முடியாமல், தினமும் அந்த அம்மையார் நமது திருமடாலயத்தின் பூஜை விபூதியை வயிற்றில் தொடர்ந்து பூசிவந்தார்கள்.

திடீரென்று ஒருநாள், வயிற்றில் தொப்புள் ஓரமாக ஒரு சிறு துவாரம் ஏற்பட்டு அதன் வழியாக வயிற்றிலிருந்து தண்ணீர் பீறிட்டுக்கொண்டு வந்தது. பின்னர் அத்துவாரம் மூடிக்கொண்டது. சில காலம் கழித்து, மீண்டும் அதே போல் துவாரம் ஏற்பட்டு நீர் வெளியாகியது. இப்படிப் பல தடவைகள் நடந்த பிறகு அந்த அம்மையாரது, பாண்டு வியாதி நீங்கிவிட்டது. இப்படி வியாதி நீங்கியவர் பலர். மேலும் பல்லாண்டுகளாக குழந்தைகளே இல்லாமல், பூஜை விபூதியை மருந்தாக உபயோகித்த பின்னர், குழந்தைகளையும் பெற்றெடுத்திருக்கிறார்கள்.

## 6. திருநீறு, பில்லி, சூனியம், கண்ணேறு பாதிக்காமல் காக்கும்.

நெற்றியில் பூசுகின்ற விபூதியானது, பில்லி, சூனியம்' கண்ணேறு முதலியவற்றால் ஏற்படும் தீங்குகளைத் தடுத்துக் காக்கக்கூடிய மிக்க சக்தி வாய்ந்தது. சிவபெருமான் அதனை அணிந்திருக்கின்ற காரணத்தினாலும், புருவ மத்தியை அது மூடிக்கொள்வதாலும், விபூதியானது, பில்லி, சூனியம், கண்ணேறு முதலியவற்றைப் பலிக்கவிடாமல் காத்துவிடுகிறது. மந்திரித்துக் கொடுக்கின்ற இந்துக்களும், முஸ்லிம்களும் விபூதியையே உபயோகப்படுத்துகிறார்கள் என்ற உண்மை யாவரும் அறிந்ததே!

## 7. திருநீறு முகத்திற்கு அழகைத் தரும்.

"டால்கம் பவுடர்" என்ற வாசனைப் பவுடரை அழகுக்காகவும், உடல் நாற்றம் தெரியாமல் இருப்பதற்காகவும்

ஆண்களும், பெண்களும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். ஆனால், அப்பவுடரின் மணமும், பளபளப்பும், சிறிது நேரத்தில் உடம்பில் உண்டாகும் வியர்வையால் மாறிவிடும். அவற்றிற்கு, கிருமிகளைக் கொல்லக்கூடிய ஆற்றலோ உடல் நாற்றத்தைப் போக்கக்கூடிய ஆற்றலோ இயல்பாகக் கிடையாது. வழுவழுப்பான அப்பவுடரைத் தோலில் ஒட்டச் செய்வதற்காக சுத்தம் செய்த சுண்ணாம்பு கொஞ்சம் அதனுடன் சேர்த்தாக வேண்டியதிருக்கிறது. அதனால், அவை தோலில் உள்ள மிருதுவான தன்மையைக் கெடுத்து, வயதானவர்களது தோலைப்போல் மாற்றி விடுகின்றது.

திருநீற்றை நெற்றியிலும், உடம்பிலும் பூசுவதால் உடம்பிலிருந்து வரும் வியர்வையைக் குறைத்துவிடுவதோடு விரைவில் அவ்வியர்வையை உலரச் செய்து, அதன் நாற்றத்தையும் போக்கி, அதிலுள்ள கிருமிகளையும் 'கொன்று' முகத்திற்கு அழகையும், ஒரு பொலிவையும் கொடுக்கிறது. திருநீறு அழகைத் தரும் என்பதைத் தனது தேவாரத்தில் ஞானசம்பந்தப் பெருமான் "காண இனியது நீறு-கவினைத் தருவது நீறு" என்று பாடி அருளியிருக்கிறார். அது போலவே, ஔவைப் பாட்டியும் "நீறில்லா நெற்றி பாழ்" "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று பாடியிருக்கிறார்.

### 8. திருநீறு ஞாபக சக்தியைக் கொடுக்கும்.

திருநீற்றை நாம் உடம்பில் பூசினால், அது மேலே கூறியபடி, வியர்வை நாற்றத்தைப் போக்கி, தொத்து நோய்க் கிருமிகளைக் கொன்று, தொத்து நோய்களினின்றும் நம்மைப் பாதுகாத்து, நம்முடைய உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள உதவி செய்யும். அத்துடன், சிறப்பாக, நெற்றியில் விபூதியைப் பூசுவதால் நமது ஞாபக சக்தியை நாம் அதிகப்படுத்திக்கொள்ளலாம். காரணம், நெற்றியில்தான் ஞாபக சக்தி இருக்கிறது.

அதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். சிறு குழந்தைகளை ஏதாவது ஒரு பாடத்தைத் மனனம் செய்து ஒப்பிக்கச்

சொன்னால், ஒப்பித்துக் கொண்டிருக்கும்பொழுதே கண்களை ஏறெடுத்துப் பார்ப்பார்கள். இமைகளையும், புருவங்களையும் உயர்த்தி நெற்றியைச் சுளிப்பார்கள் காரணம் மறந்தது, ஞாபகத்திற்கு வருவதற்கு, புருவங்களையும், இமைகளையும் உயர்த்திச் சுளித்துச் சற்று ஞாபக ஓட்டத்தைச் சரி பண்ணிக்கொள்ள வேண்டியதிருக்கிறது.

பெரியோர்களும் கூட, ஏதாவது ஒன்றை மறந்து விட்டால், கையில் வைத்திருக்கும் பென்சிலையோ, பேனாவையோ அல்லது விரலையோ கொண்டு நெற்றியில் மெதுவாகத் தட்டி ஞாபகப்படுத்திக் கொள்வதை யாவரும் அறிவர் ஒலிப்பதிவுக் கருவி (Tape Recorder) அல்லது ஒளிப்பதிவுக் கருவி (Television) போன்ற நவீனக் கருவிகள் மூலம் முன்னே பேசியதையும் முன்னே கண்டதையும் பதித்து வைத்துக் கொண்டு பின் அந்தப் பேச்சைக் கேட்கவும், காட்சியைத் திரும்பவும் பார்க்கவும் செய்கின்றோம். இந்த இரண்டு கருவிகளையும் மனிதன் கண்டுபிடித்தான். ஆனால், கடவுள் இந்த இரண்டு கருவிகளையும் சேர்த்து, நமது நெற்றியில் அமைத்திருக்கின்றார். அவ்வாறு அமைத்திருப்பதாலேயே நாம் நமது ஐந்து வயதிலிருந்து படித்தவற்றையும். கேட்டவற்றையும், கண்டவற்றையும், அனுபவித்தவற்றையும் ஞாபகத்தில் வைத்துப் பின்னர் நினைவுபடுத்திச் சொல்லவும், சிந்திக்கவும் முடிகிறது. ஒலிப்பதிவுக் கருவியில் (Tape Recorder) உள்ள மெல்லிய கருவிகள் தூசு படியாமல் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, அது போலவே நாம் நமது நெற்றியையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## 9. திருநீறு புத்திக் கூர்மையைத் தரும்

ஒருவருக்கு ஞாபகசக்தி எவ்வளவு இருக்கின்றதோ, அந்த அளவு புத்திக் கூர்மையும் இருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. திருநீற்றை நெற்றியில் பூசு

வதால் புத்திகூர்மை உண்டாகும் என்பதைத் திருஞான சம்பந்தர் பெருமான் ''மாணம் தகைவது நீறு; மதியைத் தருவது நீறு' என்று தனது தேவாரப் பதிகத்தில் அருளி யிருக்கிருர் மேலும், நாம் குடியிருக்கின்ற வீட்டைவெள்ளை அடித்துச் சுத்தமாக வைத்திருப்பதுபோல, அறிவு குடியி ருக்கும் நெற்றியையும் திருநீறு அணிந்து சுத்தமாக வைத் திருக்க வேண்டியது அவசியமாகிறது.

———

(தொடரும்)

சிவ சிவ]

# அருள் மொழி அமுது

34. கழுமல முதுபதிக்கவுணியர்
C. இயன்றது போதும் என்றூர்
(திருச்சிற்றம்பலம்)

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை–1, திருச்சி மாவட்டம்.

"நான்மறைகளும் ஐம்புலனடக்கிய அறுதொழிலாளரும் ஏழுலகும் வாழவந்த சம்பந்தன் வந்தான்" என்றும் "அம்மையிடம் பாலருந்திய ஐயன்வந்தான்" என்றும் "முத்தமிழ் விரகன் வந்தான்" என்றும் சின்னங்கள் ஊத சம்பந்தப்பெருமான் திருவரத்துறை வந்தனர். திருக்கோயிலில் புகுந்து "என்னையும் பொருளாயெண்ணி அருள் புரிந்தனையே!" என உருகிப் பணிந்தார். பின் பல தலங்களையும் பணிந்து சீகாழி வந்தடைந்தார். ஒரு பிறப்பும் கிடையாத சம்பந்தமூர்த்திக்கு உபநயனம் செய்வித்து இரு பிறப்பாளராக்கினர் (பிராமணன் பிறந்து வளர்ந்தபின் பூணூல் கல்யாணம் செய்துகொள்ளும் போது மறுபடி பிறப்பதாக மரபு. அதனாலேயே பிராமணருக்கு (த்விஜர்) இருபிறப்பாளர் என்ற பெயர் உண்டு.) வேத பிராமணர்கள் "உனக்கு நாலு வேதங்களையும் தந்தோம்" எனக் கூறியபோது, சம்பந்தப் பெருமான் தன் வாக்கினால் வேதம் கூறி, பிறருக்கு வேதங்களிலுள்ள ஐயங்களையும் தீர்த்துவைத்தார்.

ஒரு பிறப்பும் எய்தாமை உடையார் தம்மை உலகியல்பில் உபநயன முறையாகும்
இருபிறப்பின் நிலைமையினைச் சடங்குகாட்டி எய்துவிக்கும் மறைமுனிவர் எதிரேநின்று
வருதிறத்தின் மறைநான்கும் தந்தோம் என்று மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுரவாக்கால்
பொருவிறப்ப ஓதினார் புகலிவந்த புண்ணியனார் எண்ணிறந்த புனிதவேதம்.

மறைகளில் காயத்ரி மந்திரம் ஓதப்படும். சூரியனே பரம் பொருளென்றும், மும்மூர்த்திகளின் உருவாகச் சூரியன் விளங்குகின்றான் என்றும் அந்தணர் வணங்குவர். சம்பந்தரோ காயத்ரியின் உள்ளீடு பரம்பொருளே என்றும், சிவமூர்த்தமாகவே சூரியனை வணங்கவேண்டுமென்றும் தெளியவைத்து, மூன்று சந்திகளிலும் ஜபிக்கவேண்டியது பஞ்சாட்சரமே, அதுவே வேதப்பொருள் எனப் பொருள்பட

துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமினுடொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

தேவாரம் பாடினார்.

இவ்வாறு சீகாழியில் வதிந்த சம்பந்தப்பிள்ளையாரைப் பற்றி அப்பர் கேள்வியுற்றனர். சம்பந்தருக்குப் பொற்கிண்ணத்தில் பாலளித்தது பொன் உயர்ந்தது என்பதாலல்ல. மண்ணும் பொன்னும் அடியாருக்கு ஒன்றே. எனவே பொற்கிண்ணத்தால் என்பது ஞானத்தாலாகிய பாத்திரம் எனக்கொள்ளல் வேண்டும். ஆணவ-கன்மமலங்கள் கலவாத சுத்தமாயத்தால் செய்யப்பட்ட பாத்திரம். உலகத்துப் பொன்னல்ல. இப்படிப்பட்ட பாலுண்ட பெருமானைக் காண தொண்டர் வேடமே திருநாவுக்கரசர் உருவில் தோன்றியது.

சிந்தையிடையறு அன்பும்: திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும்: கையுழவாரப் படையும்:
வந்திழி கண்ணீர் மழையும்: வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்தரசு மெதிர் வந்தணைய

என அப்பர் சுவாமிகளின் திருவுருவைப் படம் பிடித்துக் காட்டுகின்றது அருள்மொழித் தேவரின் அமர கவிதை. அப்பர் பெருமானைத் திருக்கோவிலுக்கு அழைத்துச் சென்று, பாடல் பாடச்செய்து, தம் மனையிலிருத்தி உபசரித்தனர். சின்னாட்கள் தங்கிய அப்பர் பெருமான் சில தலங்களை தரிசிக்க விரும்பி விடைபெற்றுச் சென்றனர்.

அவ்வாறு அப்பர் பெருமான் விடைபெற்றுச் சென்ற பின், சீகாழியிலேயே தங்கிய சம்பந்தப்பெருமான் தமிழிலேயே விதவிதமான புதிய முறைப் பாடல்களை இறைவன் மீது பாடினார். உதாரணம் வருமாறு:

## 1. திருமொழிமாற்று.

காடதணிகலம் காரரவம்பதி காலதனிற்
தோடதணிகுவர் சுந்தரக் காதினிற்றூச் சிலம்பர்
வேடதணிவர் விசயற் குருவம் வில்லுங் கொடுப்பர்
பீடதணி மணிமாட பிரமபுரத் தாரே.

[இது பொருளுக் கேற்பச் சொல்லைப் பிரித்து முன்பின் கூட்டிக்கொள்வது பிரமபுரத்தனார் காட்டைப் பதியாகக் கொள்வர். அரவத்தை அணிவர். அழகிய காதில் தோடணிவர். காலில் சிலம்பணிவர். வேடுவ உருத்தாங்கி விசயற்குப் பாசுபதம் தருவர் என்றவாறு]

## 2. திருமாலைமாற்று.

யாமாமா நீயாமாமா — யாழி காமா காணாகா
காணா காமாயாழி — மாமாயா நீமாமாயா.

[பாட்டை முன்னிருந்து பின்படிப்பினும்–மாற்றிப் பின்னிருந்து படிப்பினும் ஒன்றுபோல் வரும்.

பொருள்: யாம் : ஆன்மாக்களாகிய நாங்கள் கடவுளென்றால் | ஆமா : பொருந்துமா? நீ : கடவுளென்றால் | ஆம் ஆம் : தகுதியே | மாயாழீ : பேரியாழ்வாசிப் போனே |

காமா : கட்டழகனே | காண் : காணுமாறுபூண்ட | நாகா: பாம்புகள் உடையவனே | காணுகாமா : மன்மதனை உரு வில்லாமல் செய்தோனே | காழீயா : காழிப்பதியாய் | மா மாயா : திருமாலாகவும் வருவானே | நீமா மாயா : கரிய மாயமலங்களின்றும் எம்மைவிடுவிப்பாய் என்றவாறு.

3. சீகாழியின் பன்னிரண்டு திருப்பெயர்களும் வந்த வரலாற்றினை வழியே மொழிதலினால் வழிமொழிப் பதிகமென ஒன்று பாடினார்.

## 4. திரு ஏகபாதம்

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்
பிரமபுரத்துறை பெம்மானெம்மான்
பிரமபுரத்துறை பெம்மானெம்மான்
பிரமபுறத்துறை பெம்மானெம்மான்

நாலடிகளும் ஒரே மாதிரி வந்ததால் ஐகபாதமெனப் பெய ரிடப் பெற்றது விரிக்கிற் பெருகும். வல்லார் வாய் கேட்டுணரலாம்.

## 5. திரு எழுகூற்றிருக்கை.

பாடலிலேயே ஒன்று முதல் ஏழுவரை ஏறி இறங்கி வரக்கூடிய எண்ணலங்கார நயமுடையது. தந்தையாகிய சிவபாத யிருதயர் தேவாரப் பாடல்கள் பூராவும் தினசரி பாராயணம் செய்ய முடியாது வருந்த, அவருக்காகச் சம்பந் தப்பெருமான் 47 வரிகளில் இதனைப்பாடி, இதனை தினசரி பாடினால் தேவாரம் பாடிய பயன் கிடைக்குமெனக் கூறி யருளினார் என்பது வரலாறு. இதில் சீகாழித் தலத்தின் பன்னிரண்டு திருப்பெயர்களும் அழகாக அமைக்கப்பெற் றுள்ளன.

ஞான சம்பந்தர் தவிர தமிழ்ச் சான்றோர்களாகிய நக்கீரர். திருமங்கையாழ்வார், முதலானோர் திருவெழு கூற் றிருக்கை பாடியுள்ளனர்.

பின்னர் சீகாழி விட்டு புறப்பட்டு திருசின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர் திருமழ பண்ணிக்கரை (தற்காலம் இலுப்பப்பட்டு) வடகுரங்காடுதுறை, திருப்பழனம் முதலான பல தலங்களை தரிசித்துக்கொண்டு திருப்பாலாசிரமம் வந்து அடைந்தனர்.

கொல்லிமழவன் என்ற அரசனது மகளுக்கு முயலகன் (காக்கை வலிப்பு மாதிரியானது) என்ற நோய் பீடித்து வருத்த, குலவழக்கமாக அவன் சிவன் பக்தனுனதால் அப்பெண்ணை சிவன்கோவிலில் வைத்திருந்ததால் சம்பந்தப் பெருமான் வந்தபோது திருவடி வணங்கி இரந்தான். துன்பம் கண்ட இடத்தே தீர்க்க வேண்டுமென்பதால் காழி வள்ளல் பதிகம் பாடினுர்,

துணிவளர் திங்கன் துளங்கிவிளங்கச் சுடர்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாஞ்செய்து பாச்சிலாச் சிரமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல் செய்வதோ இவர்மாண்பே.

அப்பெண் நோய் நீக்கம் பெற்று காழிவள்ளலை வணங்க அவரும் இறைவனை வணங்கி அங்கிருந்து புறப்பட்டார். பின்னர் திருபைஞ்ஞீலி திருஈங்கோய்மலை, திருநணு (பவானி) அடைந்தனர். பவானியில் சரியான குளிர் ஏற்பட்டு மக்கள் மிகவருந்தினர். காழிவள்ளலான சம்பந்தருக்கு நோய் வராததெனினும், மக்களின் நன்மையைக் கருதி குளிர் நீங்குமாறு

அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லும.:.தறிவீர்
உய்வினை நாடாதிருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல்போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்

எனப் பதிகம்பாட சூரியஒளியும் வெப்பமும் ஏற்பட்டு மக்கள் சுகமடைந்தனர், பின்னர் கொடுமுடி, கருர், ஐயர்மலை, திருப்பராய்த்துறை, அந்தநல்லூர், திருச்செந்துறை, உறையூர், திருவானைக்கா, கண்டியூர், திருவலஞ்

துறை, (பசுபதி கோயில்) திருக்கருகாவூர், சத்திமுற்றம் முதலான ஊர்களைத் தரிசித்து பட்டீஸ்வரம் வந்தனர். பூத மொன்று வெயிலால் வருந்தும் சம்பந்தப்பெருமானுக்கும் அடியாருக்கும் முத்துப்பந்தல் தந்தது. அதைப்பெற்ற மகிழ்ச் சியில்

பாடல்மறை சூடன்மதி பல்வளையொர் பாகமதில் மூன்றோர்கணையாற்
கூடவெரியூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசரமேய கடிகட்டரவினர்
வேடநிலை கொண்டவரை வீடுநெறிகாட்டி வினைவீடுமவரே

எனப் பதிகம் பாடினார். பின்னர் பழையாறை வடதளி முதலானவை வழியாக ஆடுதுறை அடைந்தார். திருவாவடு துறையில் வேள்வி செய்வதற்குத் தந்தையான சிவபாதவிரு தயர் பொருள் கேட்டனர்.

வேள்விகள் இரு வகைப்படும். வேத வேள்வி — சிவ வேள்வி எனப்படுவன. வேதவேள்வியில் அக்னி, பிரமன், இந்திரன், சிவபெருமான் முதலானோரை முன்னிட்டுச் செய் யும் வழக்கம். இவை காமியமெனப் பயன்கருதிச் செய்யப் படும். சிவபுண்ணியத்திற்காக மட்டும் செய்யப்படும் வேள்வி சிவவேள்வி. சிவபாத இருதயர் இவ்வேள்வியே செய்ய எண்ணினர். தந்தையார் பொருள் கேட்டதற்குச் சம்பந்தமூர்த்தி ''என்றும் அழியாப் பொருள் இறைவனது அடித்தலங்கள் அன்றோ ?'

"அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள்
எந்தையார் அடித்தலங்களன்றோ?"

என, பிறருக்கு ஈவதொன்றுமில்லாமல் வைப்பதுதான் என்னை யாட்கொள்ளும் வண்ணமோ ?''

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல்தொழுதெழுவேன்
கடறனிலமுதொடு கலந்தநஞ்சை
மிடறனிலடக்கிய வேதியனே.
இதுவோ எமையாளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறையரனே.

என வேண்டிப் பாடியபோது பூதமொன்று பலிபீடத்தின் மேல் ஆயிரம் பொன் வைத்தது. பொன்னைத்தந்து வேள்வி செய்யுமாறு தம் தந்தை சிவபாதயிருதயரைச் சீகாழிக்கு அனுப்பி. திருக்கோழம் பம்திருவைகல், மாயூரம் முதலிய தலங்களின் வழியாக தருமபுரம் வந்தனர். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாய் பிறந்த ஊர் தருமபுரம் அங்கிருந்தவர் கள் திருநீலகண்டயாழ்ப்பாணரிடம் ''தாங்கள் சம்பந்தப் பெருமானது பாடல்களை இசையுடன் யாழில் வாசிப்பதால் அவை உலகம் பூராவும் பரவுகின்றன'' எனப் பேசினர். யாழ்ப்பாணர், ''பெருமானது வாக்கை யாழில் வாசிப்பதால் யாழின் பெருமையன்றோ அதிகமாகிறது. இவர்கள் அறியா மல் பேசுகிறார்களே'' எனத் திடுக்கிட்டு வருந்தினர் சம்பந்தப் பெருமானின் பாசுரங்களின் பெருமையை இவர்களுக்குக் காட்டவேணுமெனத் திருவுளங்கொண்ட யாழ்ப்பாணர் சம்பந்தப்பெருமானிடம் ''உலகத்தவர் யாழுக்கடங்காத பெருமையுடையது பதிகங்கள் என அறியுமாறு பதிகம் பாடி யருளவேணும்'' என வேண்ட

## யாழ் மூரிப் பதிகம்

மாதர் மடப்பிடியு மடவன்னமு மன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வார்
பூதவினப்படை நின்றிசை பாடவு மாடுவ
ரவர் படர்சடைந் நெடுமுடியதொர் புனலர்
வேதமொடேழிசை பாடுவராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரைபொருது விம்மிநின்றயலே
தாதவிழ் புன்னைதயங்கும் மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே

எனப் பாடினர். யாழில் இந்தப் பாடலை மீட்டமுடியாத திருநீலகண்ட யாழ்ப்பாணர், யாழை உடைக்க முயன்ற போது, சம்பந்தப்பெருமான் தடுத்து நிறுத்தி ''இறைவனின் திருவருளின் பெருமையெல்லாம் யாழில் அடங்குமோ ?.. நாம் முடிந்தவரைதான் வாசிக்கலாம். அதனால் யாழை உடைத்தல் கூடாது'' எனத் தடுத்து நிறுத்தியருளினர்.

தேவாரத்தை யாழில் இட்டு முடிந்தவரை வாசிக்குமாறு பணித்தார் காழிவள்ளல் தேவாரத்திற்குப் பொருள் கூறுவதும் இதேமாதிரி சக்திக்கு அப்பாற்பட்டது. ஆதலால் இயன்றவரை பொருள்கொண்டு இன்புறவேண்டும் என்பது குறிப்பு.

திருச்சிற்றம்பலம்

98

# கம்பர் இயற்றிய சரஸ்வதி அந்தாதி

## மூலமும் உரையும்


'' செந்தமிழ்ச் செல்வன் ''

புலவர் திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,

தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)


11. ஒருத்தியை, ஒன்றும் இலாஎன் மனத்தின் உவந்துதன்னை
இருத்தியை, வெண்கமலத்து இருப்பாளை, எண்ணெண் கலைதோய்
கருத்தியை, ஐம்புலனும் கலங்காமல் கருத்தையெல்லாம்
திருத்தியை யான்மறவேன், திசை நான்முகன் தேவியையே,

**உரைவிளக்கம்:—**

ஒப்பற்றவளும். ஒரு தகுதியும் இல்லாத என் மனத்தில் தன்னை வீற்றிருக்கச் செய்தவளும், வெண் தாமரையில் இருப்பவளும், அறுபத்துநான்கு கலைகளில் தோய்ந்த கருத்தை உடையவளும், தன் அடியவர்கள் ஐம்புலன்களாற் கலங்காமல், அவர்களின் உள்ளத்தையெல்லாம் திருத்துபவளும், நான்முகன் தேவியுமாகிய கலைமகளை, யான் எப்பொழுதும் மறவாமல் தியானித்து வழிபடுவேன்.

12. தேவரும், தெய்வப்பெருமானும், நான்மறை செப்புகின்ற
மூவரும், தானவர் ஆகி உள்ளோரும், முனிவரரும்,
யாவரும், ஏனைய எல்லா உயிரும் இதழ்வெளுத்த
பூவரும் மாதின் அருள்கொண்டு, ஞானம் புரிகின்றதே.

**உரைவிளக்கம்;-**

தேவர்களும், தேவர்களின் தலைவனாகிய இந்திரனும், நான்கு வேதங்களும் துதிக்கின்ற மும்மூர்த்திகளும், அசுரர்களும் சிறந்த முனிவர்களும், மற்றுமுள்ள எல்லோரும்,

எல்லா உயிர்களும், அறிவுடையவராக விளங்குதல், வெண்மையான இதழ்களையுடைய தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் கலைமகளின் கருணையினுலேயாம்.

13. புரிகின்ற சிந்தையின் ஊடே புகுந்து புகுந்து இருளை
அரிகின்றது. ஆய்கின்ற எல்லா அறிவின் அரும்பொருளைத்
தெரிகின்ற இன்பம் கனிந்தூறி நெஞ்சம் தெளிந்துமுற்ற
விரிகின்றது, எண்ணெண் கலைமாது உணர்த்திய வேதமுமே.

உரை விளக்கம்:-

தன்னை விரும்புகின்ற அடியவர்களின் உள்ளத்தினுள்ளே புகுந்து நின்று, அவர்களின் அறியாமையாகிய அக இருளை அழிப்பதும், நுட்பமாகஆராய்கின்ற எல்லோருடைய அறிவினுலும், அருமையான தத்துவப் பொருள்களை அறிந்து, அதனுல் ஆனந்தம் நிறைந்து, நெஞ்சம் தெளிவடைந்து முதிரும்படி பரவுவதும், அறுபத்துநான்கு கலைகளுக்கும் உரிய தெய்வமாகிய கலைமகள் கூறியருளிய வேதமேயாகும்,

14. வேதமும், வேதத்தின் அந்தமும், அந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும், பேதத்தின் மார்க்கமும், மார்க்கப் பிணக்கு அறுக்கு
போதமும், போத உருவாகி எங்கும் போதிந்த விந்து
நாதமும், நாதவண்டு ஆர்க்கும் வெண்டாமரை நாயகியே

உரை விளக்கம்:-

வேதங்களும், அவற்றின் அந்தங்களாகிய உபநிடதங்களும் அவற்றில் கூறப்பெறும் கடவுளரின் வகைகளும், அவ்வக் கடவுளரின் சமய நெறிகளும், அச்சமய நெறிகளின் பிணக்குகளை நீக்குகின்ற ஞானமும், ஞானவடிவமாகி எல்லா விடங்களிலும் மறைந்து உறைகின்ற விந்துநாதமும். முதலிய எல்லாமும் ஆகவிளங்குபவள், வண்டுகள் ஒலிக்கின்ற வெண்தாமரை மலரின் தலைவியாகிய கலைமகளேயாவள்.

15. நாயகம் ஆனமலர் அகமாவதும், ஞானஇன்பச்
சேய்அகம் ஆனமலர் அகமாவதும், தீவினையால்
ஏய் அகம்மாறிவிடும் அகமாவதும் எவ்வுயிர்க்கும்
தாயகம் ஆவதும், தாதார் சுவேத சரோருகமே.

உரை விளக்கம்:-

எல்லா மலர்களிலும் சிறந்த தலைமையான மலராகப் பெறுவதும், ஞானமாகிய இனிய குழந்தை வளர்கின்ற இடமான மலராகப் பெறுவதும், முற்பிறவிகளில் செய்த பாவங்களால் விளங்குகின்ற செருக்கு நீங்குதற்குரிய இடமாகப் பெறுவதும். எல்லாஉயிருக்கும் தாய்வீடாகப்பெறுவதும் கலைமகள் வீற்றிருக்கும் வெண்தாமரை மலரேயாகும்.

16. சரோருகமே, திருக்கோயிலும், கைகளும், தாள் இணையும்
உரோருகமும். திருஅல்குலும், நாபியும், ஓங்கிருள்போற்
சிரோருகம் சூழ்ந்த வதனமும், நாட்டமும், சேயிதழும்
ஒரோர் உகம் ஈர்அரை மாத்திரை ஆன உரைமகட்கே.

உரை விளக்கம்;-

நெடிய ஒவ்வொரு ஊழியும். சிறிய ஒரு நொடியளவு பொழுதாக உடைய கலை மகளுக்கு இருப்பிடமும், கைகளும் இரண்டு திருவடிகளும், தனங்களும், அழகிய அல்குலும், இருள்போன்று கறுத்த கூந்தல் சூழ்ந்த திருமுகமும், திருக்கண்களும், சிவந்த இதழும் ஆகிய எல்லாம், செந்தாமரை மலர்களேயாகும்.

17, கருந்தாமரை மலர்: கண் தாமரை மலர்; காமருதான்
அருந்தாமரை மலர்; செந்தாமரை மலர்: ஆலயமாத்
தருந்தாமரை மலர்; வெண்தாமரை மலர்; தாவி எழில்
மெருந்தாமரை மணக்கும் கலைக்கூட்டப் பிணைதனக்கே.

குற்றமற்ற அழகிய பெரிய தாமரை மலரில் வாழ்கின்ற கலைமகளுக்குக் கண்கள், கருநெய்தல் ஆகிய கருந்தாமரை மலர் போலும்; திருவடிகள், செந்தாமரை மலர் போலும்; அவள் எழுந்தருளியிருக்கும் இடம் வெண்டாமரை மலர் ஆகும்.

18. தனக்கே துணிபொருள் என்னும் தொல்வேதம்; சதுர்முகத்தோன்
எனக்கே சமைந்த அபிடேகம் என்னும்; இமையவர்தம்
மனக்கே மாற்றும் மருந்து என்ப; சூடும் மலர் என்பன்யான்
கனக்கேச பங்கக்கலைமங்கை பாதகமலங்களே!

உரை விளக்கம்:

மேகம் போன்ற கூந்தலின் பாரத்தையுடைய கலைமகளின் பாதமாகிய தாமரைகளை, வேதங்கள் தமக்கே உரியனவென்று, துணியப்பெற்ற பொருளாகக்கூறும்; நான்முகனாகிய பிரமதேவன் தன் தலையில் சூடிக்கொள்ளத் தகுந்த மகுடம் என்று புகழ்வான்; தேவர்கள் தங்கள் மனத்திலுள்ள கவலைகளைத் தீர்க்கும் மருந்து என்று சொல்வார்கள்; யானோ என் தலையின் மேல் சூடிக்கொண்டு வணங்கத்தக்க பூ என்று கூறுவேன்,

19. கமலந்தன்னில் இருப்பாள். விருப்போடு அம்கரம் குவித்துக்
கமலம் கடவுளர் போற்றும் மென்பூவை; கண்ணில் கருணைக்
கமலந் தனைக்கொண்டு கண்டு, ஒருகால் தம் கருத்துள் வைப்பார்
கமலம் கழிக்கும் கலைமங்கை ஆரணி காரணியே

உரை விளக்கம்:

தாமரை மலரில் வீற்றிருப்பவளும் தேவர்கள் விருப்பத்துடன் தமது அழகிய கைகளாகிய தாமரைகளைக் குவித்துத் துதிக்கின்றவளும், கிளிபோன்ற மொழியுடையவளும், வேதங்களின் வடிவமாக இருப்பவளும், எல்லாவற்றிற்கும், காரணமாகத் திகழ்பவளும் ஆகிய கலைமகள், தன்னை மனத்தில் வைத்துத் தியானிப்பவர்களுடைய அறிவின் குற்றங்களைத் தனது கடைக்கண்ணின்று வெளிப்படுகின்ற அருள் வெள்ளத்தால் போக்கிவிடுவான்.

20. காரணன் பாகமும் சென்னியும் சேர்தரு கன்னியரும்
நாரணன் ஆகம் அகலாத்திருவும் ஓர் நான் மருப்பு
வாரணன் தேவியும், மற்றுள்ள தெய்வ மடந்தையரும்
ஆரணப் பாவை பணித்த குற்றேவல் அடியவரே.

உரைக்கோவை:

சிவபெருமானின் இடப்பக்கத்திலும் முடியின் மீதும் தங்கியுள்ள இளமகளிரான பார்வதி கங்கை என்பவர்களும் திருமாலின் மார்பைவிட்டு நீங்காத திருமகளும், ஒப்பற்ற நான்கு தந்தங்களைக்கொண்ட ஐராவதம் என்னும் யானையை உடைய இந்திரனின் மனைவியாகிய இந்திராணியும் மற்றும் உள்ள தேவ மாதர்களும் ஆகிய அனைவரும் வேதங்களின் தலைவியாகிய கலைமகள் பணிக்கின்ற குற்றேவல்களைச் செய்யும் அடியவர்களேயாவர்.

# அலங்கார நாயகன் 27

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,

தமிழாசிரியை, நாமக்கல்.

## வெளியான இரகசியம்.

ஏரகத்துச் செட்டியார்,

முருகனுக்குச் செட்டி என்பதும் ஒரு பெயர். செட்டி என்ற சொல் சிரேஷ்டி என்ற வட சொல்லினின்றும் மருவி வந்தது என்று கூறுவார்கள், பிறர் பொருளையும் தம்பொருள் போல் பேணி வாணிகம் செய்கின்றவர்கள் வணிகர்கள் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. அத்தகைய வணிகர்கள் சமுதாயத்தின் தூண்கள். அவர்களை சிரேஷ்டிகள் என்று சொல்லுவது மிகவும் பொருத்தமானது.

முருகனும் ஒரு சிரேஷ்டமானவன், ''தேவ தேவ தேவாதி தேவப்பெருமானே'' என்று அவனுடைய சிரேஷ்டத்தை அடுக்குகிறார் அருணகிரிநாதப் பெருமான், ''செட்டியப்பனை'' என்று சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடுகையில் முருகனைச் செட்டியென்று குறிக்கிறார், திருப்புகழில் ''செட்டி எனுமோர் திருநாமக்காரா'' என்று வருகிறது. முருகனைச் செட்டி என்று வழங்கும் வழக்கை வைத்துக் கொண்டு ஒரு புலவர் வேடிக்கையாக ஒரு பாட்டைப் பாடுகிறார், திருவேரகமாகிய சுவாமி மலையில் முருகப்ப செட்டியார் கடை வைத்திருக்கிறார், ''ஏரகத்துச் செட்டியாரே என்று அழைத்து தம் விருப்பத்தை வெளியிடுகிறார் புலவர்,

செட்டியாரே வெங்காயக் குழம்பு வைக்கலாம் என வெங்காயமும், வெந்தயமும் வாங்கிச் சென்றேன், கவனம் இன்மையால் வெங்காயம் இருப்பதை மறந்துவிட்டேன், அது

இப்போது ஒட்டி உலர்ந்து சுக்காகிப் போய்விட்டது. எதற்தும் பயன் இல்லாமல் போயிற்று வெறும் வெந்தயத்தை வைத்துக்கொண்டு யான் என்ன செய்யப் போகிறேன் காய்ந்துபோன வெங்காயத்தை வீணே சுமந்துக்கொண்டிருப் பதில்தான் என்ன பயன் ? குழம்பிற்குப் போடப் பெருங் காயம் வாங்கவேண்டும் என்று எண்ணினேன், இப்போது அந்த எண்ணமெல்லாம் போய்விட்டது. வெங்காயம், வெந் தயம், பெருங்காயம் ஒன்றுமே வேண்டாம், வெறும் சீரக ரசம் வைக்க சீரகம் தாரும் என்று ஏரகத்துச் செட்டியாரிடம் வேண்டுகிறார்,

''வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
சிங்காரர் சுமந்திருப்பர் இச்சரக்கை — மங்காச்
சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே''

இந்தப் பாட்டை மேலெழுந்தவாறு பார்த்தால் வெங்காயக் குழம்பு வேண்டாத சாது ஒருவன் சீரக ரசத்தை விரும்பிச் சீரகம் கேட்பது போல் தோன்றுகிறது உண்மைப் பொருள் வேறு. உடம்புக்குக் காயம் என்பது பெயர், இது பல நோய் களுக்கு இடமாக இருப்பது. வெப்பம் உள்ளது ஆகவே இதுவே வெங்காயம், பல உறுப்புக்களையுடைய பெரிய இயந் திரம் இது. எனவே பெருங்காயமாகவும் (பெரிய உடம்பா கவும்) இருக்கிறது. வெறும் காயத்திற்கு மதிப்பு இல்லை. உயிரோட்டம் வேண்டும், இது உலர்ந்து போனால் இதை யாரும் தொடமாட்டார்கள், வெந்த அயமாகிய அயபஸ்பத் தை உள்ளே புகுத்தினாலும் பிணம் உயிர்பெற்று எழாது. பயன் இல்லாச் சரக்காகிய இந்த உடம்பைச் சுமந்து திரிவதை ஞானிகள் விரும்பமாட்டார்கள், உயிர் பழவினையின் பயனை அனுபவிக்க வந்து தங்கும் குடிசை இது. நிரந்தரமாக உள்ள சிறந்த மோட்சமே உயிர் இன்பம் பெறும் இல்லம், சிறந்த வீடு, சீர் அகம், அந்தச் சீரகத்தை இறைவன் அருளினால் இந்த பெரிய உடம்பை நான் விரும்பமாட்டேன் என்று பொருள் கொள்ளவேண்டும்.

இந்தச் செட்டியாரிடம் அருணகிரிநாதர் உமது இரகசியம் வெளியாகிவிட்டது என்று சொல்லுகிறுர் அருணகிரிநாத சுவாமிகள் திருவருணையில் உள்ளம் உடைந்து ''இனி உயிர் துறப்பேன்'' என்று வல்லாளன் புதுக்கிய கோபுரத்தினின்றும் கீழேவிழ அத்துன்பத்தைக் கண்ட கருணைக் கடலாகிய கந்த பெருமான் குருவாக வெளிப்பட்டு சுவாமிகளைத் தாங்கி மௌன உபதேசம் புரிந்தனர், இவ்வரலாற்றை இப்பாடல் உணர்த்துகிறது : இன்னம் : துன்பம்,

''இன்னம் களையும் கிருபை சூழ் சுடரே'' அநுபூதி

''இன்னம் குறித்து அடியேன் செவி
நீ அன்று கேட்கச் சொன்ன தன்னம்''

முருகா, நான் படும் துன்பத்தை உலகில் பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள், ஆனுல் என்னிடம் இரக்கம்கொண்டு அதைத் தீர்க்கும் வழியை யாரும் காட்டவில்லை. நீ என் துன்பத்தைக் கண்டு அதனை நீக்கவும் முற்பட்டாய், என் துன்பமும் கவலையும் போகும்படி உபதேசம் செய்தாய், என் செவி மாத்திரம் கேட்கும்படியாக அன்று ஒரு நாள் இரகசியத்தை சொன்னுய் என்று அருணகிரியார் கூறுகிறுர், தனக்கு ஆறுமுகப்பெருமான் உபதேசித்த தன்மையைப் பல இடங்களில் விளக்கியிருக்கிறுர்,

''எட்டிரண்டுமறி யாத என்செவியில்
எட்டிரண்டு மிதுவா மிலிங்கமென
எட்டிரண்டும் வெளியா மொழிந்தகுரு
முருகோனே''

''வள்ளி கோனன் றெனக்குபதேசித்த தொன்றுண்டு''

''அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த்தியவா''

குன்னம் — இரகசியம், குருநாதன் மாணவன் காதில் இரகசியமாகக் கூறுவது.

''திருப்புகழ் விருப்பமொடு செப்பென
எனக் கருள்கை மறவேனே''
''உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருட் பெறுவேனோ''

என்றும் பாடுகிறார் பக்குவத்தை அறிந்து அதற்கு ஏற்றவகை யில் உபதேசத்தைச் செய்வது குருநாதர்களின் வழக்கம், அந்த உபதேசம் அந்த சமயத்தில் அந்த மாணவனுக்கே உரிய சிறப்பான உபதேசம், அவன் ஒருவன் மாத்திரம் கேட்கும் படி செய்வது ஆதலின் அது இரகசியம்,

அருணகிரியார் தம்முடைய துன்பங்களையெல்லாம் எடுத் துக் கூறி முருகனிடம் முறையிட்டார். அந்தக் கின்னங்களை முருகன் கேட்டான். அவற்றை எண்ணி இரகசியமாக உப தேசம் செய்தான். அதை உணர்ந்தபோது அருணகிரியாருக்கு ஆஹா இது என்ன அற்புதமான உபதேசம். முருகன் என் னிடத்தில் தனியான அன்பு கொண்டல்லவா இந்த இரகசியத்தை எனக்குச் சொன்னான்? அவன் கருணையை என்னவென்று சொல்வது என்று ஆனந்தக் கூத்தாடினார்.

தனக்கு முருகன் எந்த நல்லுபதேசத்தை இரகசியமாக அருளினானோ அதே கருணைச் செயலை உலகமெல்லாம் உண ரும்படி காட்டியதே வள்ளி கலியாணம் என்பதைத் தெளிந் தார். வள்ளிநாயகியை முருகன் ஆட்கொண்ட வரலாறு முருகனுடைய கருணைச் சிறப்பைக் காட்டுவது. அந்தக் கருணையால் தான் தன்னையும் ஆட்கொண்டான் என்பதை ஒப்பு நோக்கி அறிந்தார். நமக்கு யாரும் அறியாத இரகசிய மாக உபதேசித்தது. அநுபவம் பெற அருளியது இது என்று எண்ணியிருந்தோமே. அந்தக் காலத்தில் மலைவாணன் அறிய நடைபெற்ற வள்ளித் திருமணத்திலேயே இந்தக் கருணை வெளியாகிக் கிடக்கிறதே என்று வியந்தார்.

கோடு குழல்
சின்னம் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னம் குறிச்சியில் சென்று கல்
யாணம் [illegible]

கொம்பும், குழலும் வேறு சின்னங்களும் முழங்கக் குறிஞ்சி நிலத்தவர்களாகிய குறவர்களின் சிறு பெண்ணை முன்பு அவர்கள் ஊருக்கு வலியச் சென்று திருமணம் செய்து கொண்டவனே, என்று விளித்துத் துதிக்கிறார்.

வள்ளிநாயகி திருமணம், ஆன்மா பரமான்வோடு ஒன்று படும் திருமணம், வேறு வேறு வகையில் சாதனம் புரிந்து பக்குவம் உயர்ந்தால் இறைவன் திருவருளுக்கு ஆளாவது முறை. முருகனோ தன்னை நம்பின அடியார்களிடம் பக்குவக் குறைபாடு இருந்தாலும் கருணை மிகுதியால் அவனை நாடி வந்து சோதனை செய்து ஏற்றுக்கொண்டு இன்பம் அருளுகிறான். பக்தனுக்குள்ள பக்குவக் குறைவை முருகனிடம் உள்ள கருணை மிகுதி பொருட்படுத்தாமல் நிரப்புகிறது. இந்த அனுபவத்தை வள்ளிநாயகியும் பெற்றாள், அருணகிரியாரும் பெற்றார். மற்றவர்களைப் போலவே உலகியலில் உழன்று அவருக்கு முருகன்பால் அன்பு முகிழ்த்தது. முருகன் பெருங்கருணையை மேற்கொண்டு தடுத்தாட் கொண்டான். பலவகைச் சோதனைகளைச் செய்து பக்குவம் ஏற்றிப்போதனை செய்து ஆட்கொண்டான். வள்ளிநாயகி யிடத்தும் இந்தச் சோதனையும் போதனையும் நிகழ்ந்தன, அருணகிரிநாதர் பெற்றதை அவர் ஒருவரே அறிவார். வள்ளிநாயகி பெற்றதை அன்று மலைநாட்டு ஊராகிய குறிஞ்சி முழுவதும் அறிந்தது, கோடு குழல் சின்னம் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை முன்னங்குறிச்சியில் சென்று கலியாணம் முயன்றபோது அந்தக் குறிச்சி அடியார்களிடம் இரகசியமாக நிகழும் சோதனையையும் போதனையையும் வெளியாக்கிவிட்டது.

திருப்பரங்குன்றத்திலே திருமாலும் திசைமுகனும். தேவர் தலைவனும் தரதேவ குஞ்சரியை மணந்து எமது கந்த பெருமான் கற்பொழுக்கத்தைக் காட்டியருளினர்.

பின்னர் குறிஞ்சியில் போய் வேடர் செழுந்தினைக் காத்திருந்த பிராட்டியைக்களவில் சேர்ந்து களவொழுக்கத்தையும் காட்டியருளினர், முருகா, நீ எனக்கு சொன்ன இரகசியத்தை

முன்பே குறிச்சி வெளியாக்கி விட்டதே என்று அவனைப் பார்த்தே சொல்கிறார்,

"கின்னம் குறித்துஅடி யேன்செவி
நீஅன்று கேட்கச் சொன்ன
குன்னம் குறிச்சி வெளியாக்கி
விட்டது கோடு குழல்
கின்னம் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னம் குறிச்சியில் சென்று
கலியாணம் முயன்றவனே"

# சேக்கிழாரும் சேயிழையார்களும் 7

'சிவநெறித் தவமணி'
செல்வி : த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, இடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## கமலினியார் — பரவையார் (பிற்பகுதி)

சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருப்பாச்சிலாச்சிராமத்தில் பொன்பெற்றுப் பரவையாருக்கு அளித்துப், பின் பல ஆலயங்கள் சென்று இறைவனை வழிபட்டார்.

பின்னர் ஒரு திருவிழாவிற்குத் திருமுதுகுன்றம் சென்று வழிபட்டார். அவ்வூர் இறைவன் அவர்க்கு 12000 பொன் அளித்தார். அதனைப் பெற்ற ஆரூரர் "இறைவனே! அனைவரும் அதிசயிக்கும்படி இப்பொன்னை நான் திருவாரூரில் பெறும்படி அருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளுக்கிணங்கி இறைவனும் " சுந்தரனே ! இப்பொன்னை இங்குள்ள மணிமுத்தா நதியில் இட்டு, திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் பெற்றுக் கொள்" என்று அருளினார்

அருளும் இக்கனகமெல்லாம் அடியனேற்கு ஆரூருள்ளோர்
மருளுற வியப்ப வங்கே வரப்பெற வேண்டு மென்னத்
தெருளுற வெழுந்த வாக்கால் செழு மணி முத்தாற்றிட்டுப்
பொருளினை முழுதுமாரூர்க் குளத்திற்போய்க் கொள்க
வென்றார்.

இவ்வாறாக அருளப் பெற்ற வன்றொண்டர், அப்பொன்னில் கொஞ்சம் மச்சம் வெட்டிக் கையில் வைத்துக் கொண்டு, மீதிப் பொன்னை மணிமுத்தா ஆற்றில் போட்டுவிட்டு, அன்று

எனை வலிய ஆட்கொண்ட அருளை இவ்வதிசயச் செயலில் அறிவேன் என்றுமிகுந்த அன்போடும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் பதிகள்தோறும் சென்று வணங்கிக் கடைசியில் திருவாரூர் சென்று பரவையார் திருமாளிகை சேர்ந்தார்.

அங்கயற் கண்ணும், சிவந்த கனி போன்ற வாயும் உடைய பரவையார் சுந்தரரை வரவேற்று இனிய அடிசில் அளித்து உவந்திருந்தார். அதுசமயம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் முதுகுன்றத்து நாதர் நமக்கு அளித்த பொன்னைத் தூய மணிமுத்தாற்றிற் புகவிட்டேன்; இத்திருவாரூர்க் கோயிலின் மேற்பாலுள்ள குளத்தில் அவனருளாலே போய் எடுத்துக் கொள் எனப்புகன்றார். அதற்கு மின்னல் போன்ற மெல்லிய இடையினையுடைய பரவையார் ''என்ன அதிசயம் இதுதான் என் சொன்னவாறு'' என்று முறுவலுடன் கூறினர். சுந்தர மூர்த்தி சுவாமிகள் ''நாதன் அருளால் எடுத்துத் தருவேன் என்னுடன் வருக'' என்று பரவையாரையும் அழைத்துச் சென்று, அவளைக் குளக்கரையில் நிறுத்திவிட்டுத் தான் குளத்தில் இறங்கி, அன்றுதான் குளத்திற்போட்ட பொன்னைத் தேடுவார் போலத் தடவினர். அவருடைய பாட்டில் விருப்பம் கொண்ட பரமன் பொன்னைத் தந்தருளவில்லை. இதனைக் கண்ட பரவையார் '' ஆற்றினிலிட்டுக் குளத்திற்தேடுவீர் அருள் இதுவோ '' என மொழிந்தார்.

உடனே சுந்தரர் ''பொன் செய்த மேனியினீர்'' என்று திருப்பதிகம் பாடினர். எட்டாவது பாடல் வரையிலும் பொன் தராதொழிந்து பின்னர் தந்தருளினர். அவனியுள்ளோர் அதிசயிக்கப் பெற்று மகிழ்ந்து இருவரும் மாளிகை சேர்ந்தனர்.

நம்பியாரூரர் சிவஸ்தலங்கள்தோறும் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பரவிஏத்தித் திருவொற்றியூர்ச் சேர்ந்து சங்கிலியம்மையாரை மணந்து கொண்டு வாழ்ந்த வரலாறு முன்னர் சங்கிலியார் சரிதத்தில் சொல்லப் பெற்றது

இதனை அறிந்த பரவையார் தன்னையும் அறியாத சினம் கொண்டு நெஞ்சம் தளர்ந்தார் இதனைச் சேக்கிழார் பின் வருமாறு கூறுகின்றார்.

> மென்பூஞ் சயனத்திடைத் துயிலுமேவார் விழித்தும் இனிதமரார்
> பொன்பூந் தவிசின்மிசை யினிரார் நில்லார், செல்லார் புறம்பொழியார்
> மன்பூ வாளி மழை கழியார் மறவார் நினையார் என் செய்வார்
> என்பூடுருக்கும் புலவியோ, பிரிவோ இரண்டின் இடைப் பட்டார்.

இப்படிக் கவலையுடன் வாழ்ந்து வரும் நாளில் ஆரூரர் திருவாரூர் வந்து, பரிசனங்களைப் பரவையார் மாளிகைக்கு அனுப்பினர். அவர்கள் மாளிகைக்குள் அனுமதிக்கப் பெற வில்லை. திரும்பவும் நம்பியாரூரடத்தில், வந்து பரவையார், சுந்தரர் சங்கிலியாரை மணந்த செய்தியறிந்து சீற்றம் கொண்ட வராய் இருக்கின்ற தன்மையையும், தங்களை மாளி கைக்குள் அனுமதிக்கவில்லை என்பதனையும் அறிவித்தனர்.

இதனைக் கேட்ட சுந்தரர் மனம் தளர்ந்தார். இதற்கு நான் என்செய்வேன் என்று வருந்தி உலகியல்பு கற்ற மாந்தர் சிலரைக் காதற்பரவையார் கொண்ட கோபத்தைத் தீர்க்க அனுப்பினர், அவர்களும் வெப்பத்தைத் தரும் புலவிக்கடலில் அழுந்தியிருக்கும் பரவையாரிடத்தில் சென்று "எம்பிராட் டிக்கு இது தகுமோ" என்று பலவும் எடுத்துரைத்தனர். அப்படியிருந்தும் பரவையார் சுந்தரர் மீது கொண்ட கோபம் தணியப் பெறாமல் மறுத்துவிட்டனர். மேலும் குற்ற முடைய ஆரூரர் சார்பில் மீண்டும் இம்மாற்றம் இயம்பினால் "உயிர் போதல் ஒழியாது" என்று சொல்ல அவர்களும் அஞ்சி அகன்றனர்.

சுந்தரர் தனியே இருந்து வருந்தி சிந்தித்தார்.

> "முன்னை வினையால் இவ்வினைக்கு மூலமானுள்பால் அணைய
> என்னை உடையாய் நினைந்தருளாய் இந்த யாமத் தெழுந்தருளி
> அன்னம் அனையாள் புலவியினை அகற்றில் உய்யலாம் அன்றிப்
> பின்னை இல்லைச் செயல் என்று பெருமான் அடிகள் தமை நினைந்தார்

பரவையார் கொண்ட ஊடலை நீக்கப் பெருமானே சென்றாலேயன்றி வேறு செய்வதற்கில்லை என்று துணிந்தார். அடியார்படும் இடுக்கண் கண்டு தரியாத சிவபெருமான் தோழராகிய சுந்தரர் குறை முடியாதிருப்பாரோ? காஞ்சி புரத்தில் அம்மையார் தழுவக் குழைந்த பெருமான் வளைத் தழும்பும், முலைச் சுவடும் உடைய பெருமான், நெடியோனும் காணாத் திருவடிகள் தோயத் தொண்டராம் சுந்தரர் காணும்படி வந்தணைந்தார்.

சுந்தரர் சிவபெருமானிடத்தில் "நீயே தந்த சங்கிலியை மணந்த செய்தி கேட்டுச் சினந்து பரவை நான் அவளிடம் சென்றால் தன் உயிரை முடிப்பேன் என்று துணிந்திருக்கின்றாளே? நான் என் செய்வேன், இவ்விரவே சென்று அவள் புலவி தீர்த்துத் தாரும்" என்று தாயினும் நல்ல தோழராம் சிவபெருமானிடம் முறையிட்டார்.

சிவபெருமான் தானே தன் திருவடிகள் நிலத்தில் தோயத் தூது சென்றார். தன்னுடன் வந்தவர்களை மாளிகையின் புறத்தில் விட்டு விட்டுத்தான் தன்னை அர்ச்சிக்கும் அர்ச்சகர் வேடத்தொடு பரவையாரிடம் சென்றார். பரவையாரிடத்தில் தான் வந்த காரியத்தைச் சொல்லுமுன் "நங்கை, நீ மாறாது செய்யின் நான் வந்தது உரைப்பன் என்றார். கயல் விழியை உடைய பரவையாரும் "எனக்கு இசையுமாகில் இசையலாம்" என்றார். பரவையார் கோபம் தணியாதவளாய்,

"பங்குனித் திருநாளுக்குப் பண்டுபோல் வருவாராகி
இங்கெனைப் பிரிந்து போகி ஒற்றியூரெய்தி யங்கே
சங்கிலித் தொடக்குண்டாருக்கு இங்கு ஒரு சார்வுண்டோ

இதனை நீர் இந்த இரவில் என்னிடம் சொல்ல வந்த செயல் அழகாக இருக்கிறது என்று மறுத்து விட்டாள்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிவபெருமானை ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்தார். நிச்சயமாகப் பரவை ஊடலைத் தீர்த்து வருவார் என்று நினைத்திருந்த அவர் திரும்பி வந்த

சிவபெருமானைக் கண்டதும் "அன்று நீர் ஆண்டுகொண்ட அதனுக்குத் தக்கவே செய்தீர், இன்று இவள் வெகுளியெல் லாந் தீர்த்தெழுந்தருளி'' என்று முகமன் கூறினர்.

அப்பொழுது சிவபெருமான் ''நீ சொன்னவை யெல் லாம் சொல்லி நாமே அவளை வேண்டவும்மறுத்துவிட்டாள்'' என்றார். சுந்தரர் நடுக்குற்று 'நீர் அருளிச் செய்தால் பரவையோ மறுக்க வல்லாள்'' என்று மிகவும் வருந்திப் பேசி அவளிடத்தில் இன்று மேவும்படி செய்யாவிட்டால் யான் உயிர் விடுவேன் என்றார். இதற்கிடையில் பரவை யார் இறைவன் திருவருளால், முன்பு அர்ச்சகர் வேடத்தில் வந்தவர் இறைவரே என்று உணர்ந்தார். சிவபெருமானும் உயிர்விடுவேன் என்று வீழ்ந்த சுந்தரரிடம் ''வருத்தத்தை விடுக; இன்றே அவள்பால் சென்று, உன்னுடன் சேரும்படி செய்கிறேம் என்று அளவில்லாத பூத கணங்களோடும், தாமாம் தன்மை அறிவுறு கோலத்தோடும் பரவையார் தம் மாளிகை புகுந்தார். அக்காட்சி கயிலை வெள்ளித் திருமலை போன்றிருந்தது, பரவையார் மகிழ்ச்சியோடும் எதிர் கொண்டு அழைத்து செய்ய தாளிணைமலர் வீழ்ந் திறைஞ்சினர்.

''முன்னம் அர்ச்சக மறையோராக வந்தீர்; அது யான் செய்த தவப் பயனேயாகும். இப்படி அன்பர்க்காக இங்கும் அங்குமாக உழல்வீராகில், நான் இசையாது என் செய் வேன்?'' என்று சுந்தரர் தம் மாளிகைக்கு வர இசைவு தந் தார் பரவையார். பெருமானும் ''நங்கையே நின் தன்மைக்கு ஏற்கும் நன்மையே மொழிந்தாய்'' என்று சுந்தரரிடம் மீண் டார். சுந்தரரிடம் சென்று ''தாழ்குழலாள் செற்றம் தணி வித்தோம்; நீ அவளிடம் செல்வாயாக'' என மொழிந்தார். அதற்கு சுந்தரர் ''இனி எனக்கு இடர் ஏதுமில்லை, பந்தமும் விடும் நீர் அருள் செய்த அதனால்'' என்றார்.

பரவையார் தம் மாளிகையை அலங்கரித்துத் தம் காதல் நாயகர் வந்தவுடன் பழைய கோபமெல்லாம் மறந்து, நாணும் அச்சமும் கொண்டவளாய், நம்பிகளை வரவேற்றார்.

நம்பியாரூரர் அவளுடைய செங்கை பற்றி மாளிகையுட் புகுந்தார்; இருவரும் இறைவன் அருள்திறத்தை எண்ணி மகிழ்ந்திருந்தனர்.

கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனர் திருவாரூருக்கு எழுந்தருளியபோது, பரவையார் மாளிகைக்கு வந்தார். அவரை விளக்கும் நிறைகுடமும், பூமாலைகளும், புகையகிலும், மடவார் எடுத்தேத்த எதிர்கொண்டழைத்தார். நம்பியாரூரருக்கும், சேரமான் பெருமாள் நாயனுருக்கும் பூசனைகள் செய்து, அரசர்க்கு ஏற்ற வகையிலும் அடியார்க்கு ஏற்ற சிறப்பினும் அமுது செய்வித்தார். இவ்வாறு பலநாளும் செய்தபின் பரவையார் இசைவோடும் சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனுருடன் சேர நாட்டுக்கு எழுந்தருளினர்.

பின் சேரமானும், நம்பியாரூரரும் திருக்கயிலைக்கு எழுந்தருளியபின் பரமேஸ்வரன் பங்கில் உறையும் பெருமாட்டியின் அருளாலே, பரவையாரும் சங்கிலியாரும் முன்னை நிலையடைந்து முறையே கமலினியாரும் அநிந்திதையாரும் ஆகி உமையம்மையாருக்கு முன்புபோல் திருப்பணிகள் செய்து இன்புற்றிருந்தனர்.

(தொடரும்)

# இது சரியா ? (2)

ப. உமாதேவி
9/37 திரௌபதிஅம்மன் கோவில் தெரு
அரியாங்குப்பம் — புதுவை — 7
605007

மலைநாட்டு மன்னவனின் ஆணையால் நடைபெறும் விழாவினில் கலந்துகொண்ட மக்கள் எல்லோரும் களிப்புறு கின்றனர். ஆனால் அந்த விழாவில் ஈடுபாடு காட்டாத உயிர்கள் இரண்டு அம்மலை நாட்டில் இருக்கவேச் செய்தன. ஒருத்தி அந்நாட்டு அரசனின் மகள் குறிஞ்சி நிலத்தின் தன்னி கரற்ற தலைவி அவள். பெற்றோரும், உற்றோரும் ஆயக் கூட் டமும் கண்ணை இமை காப்பது போல் காத்தனர். எழிலரசி யான அவளிடம் தங்கள் உயிரையே வைத்திருந்தனர். ஆனால் அவளுடைய உயிரோ வேறு ஒரு இடத்தில் இருந்ததை அறிந்துகொள்ளத் தவறிவிட்டனர். அதனால் நங்கைபால் ஏற்பட்ட மாறுதலை அவர்கள் அறியவில்லை என்றாலும் உயிர்த்தோழி கண்டுகொள்கின்றாள். அதனால் தலைவியின் மனதைத் தெரிந்துகொள்ளும் வழிவகைகளைப் பற்றிச் சிந் தித்துக் கொண்டிருக்கின்றாள். ஊரையும், அங்கு நடை பெறும் விழாவையும் காண்பதற்கேற்றவாறு உயர்ந்த மாடத் தில் அமர்ந்திருந்தாலும் மனம் வேறு திசையில் இருந்ததால் அவர்கள் அதனைக் கண்டு கொள்ளவே இல்லை.

சிந்தனைச் சுழலில் சிக்கியிருந்தவர்களுள் முதலில் தன் னினைவு பெறுபவள் தோழிதான்; அவள் தலைவியை அணுகி, மாலைக்காலத்து மஞ்சள் வெயிலில், மலயமாருதத் தென்றலில் அருவி நீரில் துளைந்தாடி மகிழவருமாறு அவளையழைக் கின்றாள். தலைவியின் உடல் அங்கிருந்தாலும், உள்ளம்தான் வேறு எங்கோ இருக்கின்றதே! எனவே தோழியின் அழைப்

பினைக் கேளாதவளாய் எங்கோ வெறித்து நோக்கிக்கொண்டு எதையோ எண்ணிக்கொண்டு அமர்ந்திருக்கின்றாள். அவளை யணுகியவள்,

> ஆங்கொன்று காணாய், அணியிழாய்! ஈங்கிது காண்
> அஞ்சனப் பூழி, அரிதாரத்தின் இடியல்
> சிந்துரச் சுண்ணம் செறியத் தூஉய்த் தேங்கமழ்ந்து
> இந்திர வில்லின் எழில் கொண்டு, இழுமென்று
> வந்தீங்கு இழியும் மலையருவி ஆடுதுமே!

என்றழைக்கின்றாள். அவளுடைய அழைப்பிலேயே, தோழி யின் அறிவுத்திறனும், குறும்புத்தனமும் சுடர் விடுகின்றன. ஆனால் அவை போலி விநயத்தின் கீழ் மறைந்துள்ளன.

> ''ஆங்கொன்று காணாய் அணியிழாய்! ஈங்கிது காண்''

என்று அருமையாக அழைக்கின்றாள்.சிறந்த அணிகளையணிந்த நங்கையே என்று அவள் சாதாரணமாகக் கூறுவது போல் தோன்றினாலும் நுட்பமான கருப்பொருள் உள்ளீடாக உள்ளது. அங்கே ஒன்றும் பார்க்கும்படி, அதுவும் நீண்ட நேரமாகக் காணும்படியில்லை அவ்வாறே இருந்தாலும் அது உன் கண்களுக்குப் புலப்படா. உன் பார்வை வறிதே அங்கு சென்றாலும் பார்த்ததை உணரக்கூடிய உணர்வோ, ஆற்ற லோ உன்னிடம் இல்லை. ஏனெனில் உன் அறிவும், மனமும் உன்வசம் இல்லை. அது எங்கோ சென்று இருக்கின்றது. அதை நான் புரிந்துகொண்டேன். இனியும் நீ காணவேண்டிய அவசியமும் இல்லை. மனமுடைந்து அமர்ந்திருக்க வேண்டி யதும் இல்லை. இங்கே என்னைப்பார். கவலையை விடு என் பனவற்றையெல்லாம் உள்ளடக்கி ஒரு சிறு வாக்கியமாக

> ''ஆங்கொன்று காணாய், அணியிழாய்! ஈங்கிது காண்''

என்று கூறிவிடுகின்றாள்.

குறமகளுக்கும் ஒரு மாற்றம் தேவைப்படுகின்றது. எனவே தன் கவலைக்கும் கலக்கத்துக்கும் மருந்தாக மலை வளம் கண்டும், அருவியாடியும் இருக்கலாம் என்றெண்ணிய வளாய்த் தோழியுடன் செல்கின்றாள்.

நங்கையர் இருவரும் அருவிக் கரையினை அடைகின்ற னர். அருவியின் போக்கைக் கண்ணுறும் தலைவியின் முகம் மகிழ்ச்சியால் மலர்கின்றது. பெருமித ஒளி அங்கே சுடர் விடுகின்றது. அடுத்த நொடி அவள் தன் தோழியை மறந்த வளாய் நீரினுள் பாய்கின்றாள். கரையில் திகைப்புடன் நிற் கும் தன் தோழியை நோக்கி முத்துப்பற்கள் ஒளிர புன்னகை செய்தவாறு

> ஆடுதுமே தோழி! ஆடுதுமே தோழி!
> ''அஞ்சலோம்பு'' என்று நலனுண்டு நல்காதான்
> மஞ்சசூழ் சோலை மலையருவி ஆடுதுமே

என்று நீராட அழைக்கின்றாள். அவள் மனதைப் புரிந்து கொண்ட தோழியும் நீரில் இறங்குகின்றாள். மகிழ்வு தரும் நீராட்டத்தினிடை, புதுப்புனல் தந்த இன்பத்தில் திளைத்துக் கிடந்த குறமகளின் நோக்கு எங்கும் சுற்றிப் படர்கின்றது. தொலைவில் அவளைப் போன்றே இள மங்கையர் பலர் மகிழ் வுடன் நீராடிக் கொண்டிருக்கின்றனர். அவ்வளவுதான். அதனைக் காணும் அவளுடைய செவ்வரி படர்ந்த கண்கள் மேலும் சிவந்து கோவைக் கனிகளாக, கொல்லன் ஊதுலை போல் வெப்பமான மூச்சு விட்டவாறு, செம்பவள இதழ் களை முத்துப் பற்களால் அழுத்திக் கடித்தவாறு அவசர அவசரமாகக் கரையேறுகின்றாள். அவளுடைய சினத்திற்குக் காரணம் புரியாத தோழியும் கரையேறியபின் மெதுவாக அவளுடையக் கோபத்துக்கான காரணம் கேட்கின்றாள். ''புனல்நீர்'' என்ன குற்றம் செய்தது? அதன் மேல் உனக் கேன் இவ்வளவு கோபம்? என்று வினவுபவளுக்கு விடை யாகத் தலைவி யாதொரு பதிலும் கூறாமல் நீராடும் மங்கைய ரைச் சுட்டிக்காட்டுகின்றாள். தோழியோ விழிக்கின்றாள், குழம்புகின்றாள். அதையறிந்து கொள்ளும் தலைவி ''தோழி!

இந்த புனல் அவருடைய மலைநாட்டினின்று வருகின்றது. அதுவும் வறிதே வராமல் மலைநாட்டினைச் சுற்றியுள்ள பல வகைப் ட்டச் சோலைகளில் உள்ள பல்வேறு மணமுள்ள மலர்களின் பூந்தாதுக்களையளைந்தும், பருக்கைக் கற்களைத்

தீண்டியும் வருகின்றது. எனவே புனல்மேல் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை கோபமும் இல்லை. ஆயினும் என்னையன்றிப் பிறமகளிர் அதில் நீராடினால் என்மனம் வருந்துகின்றது.

என்னொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைப்
பொன்னாடி வந்த புதுப் புனல்
பொன்னாடி வந்த புதுப் புனல் மற்றையார்
முன்னாடின் நோம்! தோழி, நெஞ்சன்றே
யாதொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைப்
போதாடி வந்த புதுப் புனல்
போதாடி வந்த புதுப் புனல் மற்றையார்
மீதாடின் நோம். தோழி நெஞ்சன்றே

என்று தன் மனத்தவிப்பை ஆற்றாமையுடன் எடுத்துரைக்கின்றாள். இதைக் கேட்கும் தோழி ''ஐயோ! பாவம், பைத்தியம் முற்றிவிட்டதே'' என்று தனக்குள் அனுதாபப்படுகின்றாள். கேவலம் அந்தத் திக்கினின்று வரும் நீரில் பிறமகளிர் ஆடினால்கூடப் பொறுக்கமாட்டாதவளாய், அவன் மேல் அளப்பெருங் காதல் கொண்டிருக்கின்றாளே. என்று எண்ணியவள் அவள் சிந்தனையைத் திசைமாற்ற விரும்பியவளாய் அவளிடம் ''நங்கையே! நாம் நமது அழகிய மையுண்ட கண்கள் சிவக்குமாறு நீராடி மகிழ்ந்தோம் நீராடி உடல் தூய்மைகொண்ட நாம் உள்ளத் தூய்மையும் கொண்டு கடல் நடுவே மாமரமாய் நின்ற அவுணனைக் கொன்ற, வெற்றி வேலினை ஏந்தியவனான முருகனைப் போற்றிக் குரவை தொடுத்து நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடி வழிபடலாம் வா''

உரையினி மாதராய்! உண்கண் சிவப்ப
புரைதீர் புனல்குடைந்து ஆடினோம் ஆயின்
உரவுநீர் மாகொன்ற வேல்-ஏந்தி ஏத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம் வா தோழி!

என்று அனைவரையும் அழைக்கின்றாள். நீராடியமங்கையர் ஒன்று சேர்ந்து தங்கள் தலைவனாகிய முருகப்பெருமானைப் பாடி பரவுகின்றனர். "சீர்கெழுமிய திருச்செந்தூர், திருச்செங்கோடு, சுவாமிமலை, திருவேரகம், ஆகிய திருத்தலங்களை விட்டு எந்நாளும் நீங்காதவன் முருகப்பெருமான், பண்டொருநாள், இப்பூவுலகைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் கடல் நடுவில் புகுந்து அங்கே உருமாறி மாமரமாக நின்ற சூரனைப் பிளந்து வீழ்த்திய, ஒளிபொருந்தியதும், இலைவடிவில் அமையப்பெற்றதுமான வெற்றிவேல், இதோ நம்முன் இருக்கின்றவனின் கரத்தில் உள்ள இவ்வேல்தான்" என்று முதலில் கந்தனின் கரத்தில் உள்ள வேலினைச் சிறப்பிக்கின்றனர். நம்முன் உள்ளவனும், அன்று அவுணனைக் கொன்றவனும் ஒருவரே. அவ்வாறிருக்க வேல்மட்டும் வேருகி விடுமா? என்ன! இதே வேல்தான் அன்று அவுணனைப் பிளந்தது என்று கூறி வணங்குபவர்கள் அன்று தேவர்களைக் காத்த அதே வேல் நம்மையும் காக்கும் என்று சொல்லாமல் சொல்லி விடுகின்றனர்.

வேலினைப் பாடியவர்கள் அடுத்து வேலனைப்பாடித் துதிக்கின்றனர். "அழகிய திருமுகங்கள் ஓராறும், திருக்கைகள் ஈராறும் கொண்டவன். அதுமட்டுமா? தனக்கு வேறு ஒன்று ஒப்பில்லாதபடிச் சிறப்புற்று விளங்குபவன். பிணிமுகத்தின் மேலேறிச் சென்று அவுணர்களின் ஆற்றல்களும் பெருமையும் அழியுமாறுச் செய்து அவர்களின் செருக்கையழித்து வெற்றி கொண்டவன். அதற்கு உதவி செய்ததும், விண்ணவர் கோனாகிய இந்திரன் போற்றுமாறு செய்ததும், பகைவர்களை யழித்ததும் அவனுடைய கரத்தில் உள்ள வெற்றி வேலே! என்பவர்கள் தொடர்ந்து, சரவணப் பொய்கையிலே, தாமரை மலர்களால் ஆக்கப்பட்ட மலர்ப் பள்ளியில் துயின்ற உனக்கு கார்த்திகைப் பெண்களாகிய அறுவரின் அன்பும், திருமுலைப் பாலும் கிடைத்தன. கார்த்திகைப் பெண்களின் திருமுலைப் பாலுண்டவனாகிய முருகனுக்கு வெற்றியைத் தந்ததும், வளர்ந்து நின்ற கிரவுஞ்ச மலையினை

பிளந்து அழித்ததும், கிரிப் படையுடன் வந்த அவுணனின் மார்பைப் பிளந்ததும் அவன் கையில் உள்ள நெடுவேல் தானே. என்று போற்றுகின்றனர்.

சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொரு நாள்
சூர்மா தடிந்த சுடரிலையவெள்வேலே!
அணி முகங்கள் ஓரா றும் ஈரா று கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுக மேற்கொண்டு அவுணர் பீடழியும் வண்ணம்
மணி விசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே
சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே

என்றெல்லாம் பாடிப் பரவி, குரவைக் கூத்தாடுகின்றனர் குறிஞ்சி நில மக்கள் முருகனைத் தமது தெய்வமாகக் கொண்டவர்கள். குரவைக் கூத்தாடுவதும், வெறியாடுதலும் அவர்கள் மரபு. என்றாலும் நங்கையர்கள் நளினமான குரவைக் கூத்தாடுவதையே மிகவும் விரும்புவர். எனவேதான் தோழி, தனது தலைவியின் மனதை மகிழ்விக்கவும், இறைவனை வணங்குவதற்காகவும் மற்றைய இளம் பெண்களை ஒன்று திரட்டி முருகனின் முன்னிலையில் நின்று, அவனையும், அவன் கை வேலினையும் பற்பலவாறு புகழ்ந்து பாடி யாடி வணங்குகின்றனர்.

(தொடரும்)

சென்ற இதழ் கட்டுரையின் திருத்தம் :

'' இளைசூழ் படப்பை இழுக்கிய ஏனத்து''
வளை வெண் கோடு பறித்து மற்றது ''
'' மானின் வயிற்றரிதாரத் திலகமிட்டு
மயிற் கழுத்து மனவுமணி வடமும் பூண்டு ''

120

# கட்டாய ஓய்வு

அ. சச்சிதானந்தம்

ஐயங்கார் குளம்

காஞ்சிபுரம் வட்டம்

மிகமிக வேகமாக விரைந்து கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்து, ''அறிவு சிறந்ததா செல்வம் சிறந்ததா?'' என்று ஒரு கேள்வி கேட்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அது அவரது செவிகளில் விழுந்ததாகப் படவில்லை. மேலும்' ''சிறந்த விடை சொன்னால் இந்தப் பணமுடிப்பை அன்பளிப் பாய்த் தருகிறோம். என்று கூறுகிறோம். உடனே அன்பர் சற்று நின்று, ''அறிவுதான் சிறந்தது! இதிலென்ன சந்தேகம்?'' என்று கூறிப் பணமுடிப்பை அடித்துக் கொண்டு செல்கிறார்.

''எனக்குப் பணம் வேண்டாம், அறிவுதான் வேண்டும்!' என்று அவர் கூறவே இல்லை.

'' சற்று நில்லுங்கள்! '' என்று கூறி அவரை நிறுத்து கிறோம். ''நிற்க நேரமில்லை, நின்றால் பஸ்தவறி விடும். பஸ் தவறினால் அவ்வளவுதான்! 5000 உருபா வியாபாரத்தில் நஷ் டம் ஏற்பட்டு விடும்!'' என்கிறார்.

''இதில் ஏதாவது ஒரு திருக்குறளை எழுதிக் கையெழுத் திடுங்களேன்!'' என்று ஒரு காகிதத்தை நீட்டுகிறோம். அவ சரத்தில் எதையோ கிறுக்கி விட்டுச் சிறகடித்துப் பறக்கிறார் அந்த அன்பர்.

அவர் என்ன எழுதினார் என்று கஷ்டப்பட்டுப் படித்துப் பார்க்கிறோம். திருக்குறள் நூல் முழுவதையும் தேடினால்

கூட அவர் எழுதிய வரிகள் அதில் அகப்படாது. அது, "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது போலத்தானிருக்கும்!

அறிவைத்தான் மதித்துப் போற்றினுர் அவர். ஆனுல் அதற்கு மாருக செல்வத்தைத் தேடியே நாளும் அலேகிருர். அவர் மட்டுமல்ல அகில கோடி மனித ராசிகளும் அப்படித் தான்!

இப்படித்தான், நீர் மேல் குமிழி போன்றது இப்புவி வாழ்க்கை என்று நிலேயாமையை நன்கு உணர்ந்தும் சமயமே உறுதியான வழி, கடவுளே உறுதியான பொருள் என்று நன்கு அறுதியிட்டறிந்தும் புவி வாழ்விலேயே விரும்பி விரும்பி அதிமோகம் கொண்டு அலேகின்ருேம், நாம்!

" முடிசார்ந்த மன்னரும் மற்று முளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணுவ' துங்கண்டு பின்னு மந்தப்
படிசார்ந்த வாழ்வை நினேப்பதல்லால் பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரிலேயே. "

என்பார் பட்டினத்தார். எவ்வளவு அழகான பாடல்!

இவைபோன்று ஆயிரக் கணக்கான பாடல்கள் ஆயிரம் ஆயிரம் பேர்கள் பாடி விட்டுப் போயிருக்கிருர்கள். எத் தனேயோ தடவை நாமும்தான் படித்திருக்கிருேம்; கேட் டிருக்கிருேம்; உணர்ந்திருக்கிருேம்.

ஆனுல் பொன்னம்பலவரின் இணேயடியை என்றேனும் அணேந்தோமா? ஒரு தடவையேனும் அஞ்செழுத்தை ஓதி நெஞ்சுருகி நின்ருேமா? திருக்கோயில் வலம் வந்தோமா? மலர்பறித்து வழிபாடு செய்தோமா? உளங்குளிர வளம்பெருக உடல்நோய்கள் அற்றெழிய திருநீறு அணிந்தோமா? இல் லேயே! எவ்வளவோ துன்பங்கள் இமயம்போல் வந்தாலும்- எண்ணற்ற பெருநோய்களே இம்மண் மீது அனுபவித்தும் திருந்திஞேமில்லேயே! பிறப்பதையே அன்ருே நம் சிறப்புமிகு தொழிலாகக் கொண்டிருக்கின்ருேம்?

இங்கே பாருங்கள், ஓர் அழகிய அப்பரது திருத்தாண்டகம் :

''திரு நாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒரு காலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்
அரு நோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெரு நோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே! ''

மண்மேல் பிறந்து விட்டோம். இனி இறக்க வேண்டும்! இறந்தால்தான் மீண்டும் பிறக்க முடியும் அதுவன்றோ நம் தொழில்! அதற்காகத்தான் நாம் இன்றுகூடப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். சாவதற்குப் பாடுபடுவதுதான் 'சாப் பாடு' என்றெல்லாம் கூடப் பொருள் சொல்லுவார்கள். தினம்தினம் மனிதன் கடினமாக உழைப்பதெல்லாம் — மிக வேகமாக நடை போடுவதெல்லாம் சாவதற்குத் தான் என் றான் ஒரு மேனாட்டறிஞன் கூட!

மாணிக்க வாசகர்கூட ஓரிடத்தே கூறுகிறார்:

''ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.''

விட்டிற் பூச்சியானது தீயின் அழகிய நிறத்தில் மயங்கி மீண்டுமீண்டும் அதிற் சென்று விழுமாப் போல பிறவிக் கடலில் மீண்டுமீண்டும் வீழ்ந்து உழல்கிறோம்; விடுபட்டோ மில்லை.

''செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழியாரிற் பன்னாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்...''

என்பார் வாதவூரடிகள்.

வெள்ளத்தின் நடுவே தாகமெடுத்து நாவற்றி நிற்பானைப் போல — பாற் கடலுட் பாலை விடுத்து அழுக்கையும் எச்சிலையுமே உண்ணும் மீன்களைப் போல தன்னையும் உணராது, தலைவனையும் உணராது, இடைப்பட்ட பாசநிலையினையும் உணராது நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் அனைத்தெலும்புள் நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான் திருவடியைச் சேராமல் பிறவியலை யாற்றினிலே மீண்டுமீண்டும் வீழ்ந்து நாம் எடுத்த பிறவிகளின் எண்ணிக்கைதான் எண்ணத் தொலையுமோ?

கைப்பிடி மணலை எண்ணுவது நம்மால் சாத்தியமாகும் காரியமல்ல. அப்படியிருக்க அருணகிரிநாதர் தான் எடுத்த பிறவிகளின் எண்ணிக்கை ஒரு கடல் அல்ல, ஏழு கடல்களின் மணல்களை எண்ணினால் எவ்வளவோ அவற்றைவிட அதிகம் என்கிறார்.

''எழுகடல் மணலை யளவிடினதிகம்
எனதிடர் பிறவி யவதாரம்
இனியுன தபயம் எனதுயிருடலும்
இனியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியும் எரிபுவி மறலி
கமலனு மிகவும் அயர்வானார்''

இப்படி எடுத்த பிறவிகளின் உடல்களைத் தின்று தின்று கழுகு நாய் நரிகள் சோர்ந்தன; அவற்றைச் சுடலையில் எரிக்கும் அக்கினி சோர்வடைந்தான்; அவ்வுடல்களைத் தாங்கும் பூமிதேவி சோர்வுற்றாள்; கூற்றுவன் சோர்ந்தான்; படைக்கும் தொழிலோனாகிய நான்முகனும் கூடச் சோர்வெய்தி நின்றானும்! அப்பப்பா! நம்மால் எத்தனை பேருக்கு எத்தனைத் துன்பங்கள்!

பட்டினத்தார் பாடிய பாடலொன்றைக் கவனியுங்கள் :

''மாதா வுடல் சலித்தாள்; வல்வினையேன் கால்சலித்தேன் ;
வேதாவும் கைசலித்து விட்டானே — நாதா
இருப்பையூர் வாழ் சிவனே இன்னுமோர் அன்னை
கருப்பையூர் வாரா மற் கா.''

[கால் சலித்தேன்—உயிர் இளைத்தேன்; வேதா—பிரமன் கருப்பையூர்—பிறவி]

இப்படிப்பட்ட பிறப்பிறப்புமாகிய தொழிலிலிருந்து நாம் கட்டாய ஓய்வு பெறவேண்டியது அவசியமன்றோ? அதற்காக நாளும் நாம் அஞ்செழுத்தை ஓதுவோமாக; சிவனது பெருமையையே என்றும் பேசப் புகுவோமாக; திருக்கோயில்களை வலம் வந்து வணங்குவோமாக; மலர் பறித்து வழிபாடு செய்து பின்பே உணவு உட்கொள்வோமாக; திருவெண்ணீற்றை அனுதினமும் மறவாமல் அனவரதமும் அணிவோமாக!

---


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6–00 வெளிநாடு ரூ. 10-00

**செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"**

தருமபுரம், மாயூரம் P. O.

# நான் கண்ட இளந்துறவி

அருணகிரிதாசன் P. S. இராமமூர்த்தி, டால்மியாபுரம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

நல்லார் இணக்கமும் நின் பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே

— பட்டினத்தடிகளார்

உயர்ந்த, தெய்வீக மணம் கமழும் நல்லார்களோடு பழகுவதில், தொடர்பு வைத்துக் கொள்வதில், அவர்களின் ஞானேபதேசங்களைக் கேட்பதில்தான் எவ்வளவு ஆனந்தமும் அமைதியும் நம் மனதில் குடிகொண்டு விடுகின்றன! மணம் நிறைந்த மலர்களைச் சார்ந்த நார் மணம் பெறுவதுமன்றி இறைவனின் திருமேனியிலும் இடத்தைப் பிடித்துவிடுகிறது! அடியார்களின் வழிசென்ருல் நாமும் ஆண்டவனின் அருளைப் பெறலாமல்லவா! மனிதப் பிறவியின் பயன் இதுதானே!

உருவத்திலே சிறியதாக இருந்தாலும் குணத்தைக் கொண்டு குன்றில் ஏறிவிடும் மிளகு! தோற்றத்தில் இளந் துறவியாக இருந்தாலும் ஞானத்தில் பழமாக காணப்படுகிருர் சுவாமி பாலானந்த சரசுவதி. வடக்கே ஹரித்வாரில் வீற்றிருந்து தெய்வப் பணிகளை நிறைவேற்றிவரும் ஞானிகளான நித்தியானந்த சரசுவதி சுவாமிகளிடம் உபதேசம் பெற்ற சுவாமி பாலானந்தருக்கு 35 வயது இருக்கலாம். பழகுவதற்கு இனிமையானவர்.

ஏறக்குறைய 180 வருட காலமாக தமிழ்நாட்டிலே ஞான ஒளி பரப்பி சமீபத்தில் சமாதியடைந்த பேரருளாளர் திருக்கோவிலூர் ஞானனந்தகிரி சரசுவதி சுவாமிகளை தமது

மானசிகஞான குருவாகவும் கொண்டுள்ளார். காஞ்சிப் பெரியவர்களிடம் குறையாத பக்தியைக் கொண்டுள்ளார்.

பஜனை செய்வதாலோ. கடவுள் திருநாமங்களைக் கூறுவதாலோ துறவிகளுக்கு எவ்வித பயனும் இல்லை; புண்ணிய — பாவங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் துறவிகள்; இருந்தாலும் குடும்பஸ்தர்களாகிய நீங்கள் சதா கடவுளை நினைக்க வேண்டுமென்று உபதேசித்து 500க்கும் மேற்பட்ட . பக்தர்களுக்கிடையே அமர்ந்து தேவாரம், திருப்புகழ், திருமால் புகழ் முதலிய திருப்பாடல்களைப் பாடி, மற்றவர்களையும் பாட வைத்தார். தேவாரப் பாக்கள், திருப்புகழ்ப் பாக்கள் மற்றும் திருக்குறள் சுவாமிகளின் நாவில் விளையாடுகின்றன என்றே கூறலாம்.

அடியார்களின் உள்ளத்தில் ஆண்டவன் ஆட்சி செலுத்துகிறான் என்றால் அடியார்களின் பெருமையை எடுத்துக்கூற யாரால் முடியும்!

இளந்துறவி சுவாமி பாலானந்தரை வணங்கி அவரிடம் பல அறிவுரைகளையும் விளக்கங்களையும் பெற்றேன். சுவாமிகளிடம் சமர்ப்பித்த ஒருசில வினாக்களையும் அவரது கருத்துக்களையும் வாசக அன்பர்கள் முன் வைக்கிறேன்.

கே: சுவாமி! வணக்கங்கள்! நித்திய கர்மானுஷ்டானங்களைச் சரிவர நிறைவேற்றாமல் கடவுள் திருநாமங்களை மீண்டும் மீண்டும் உச்சரித்தோ, பூசைகளைச் செய்தோ அல்லது பஜனையில் ஈடுபட்டோ இறைவனின் அருளைப்பெற இயலுமா?

ப: (சற்று சிரிக்கிறார்!) நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களும் பிறர் உதவிகொண்டு நித்திய கர்மாக்களை நிறைவேற்ற வேண்டுமென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. நமது இந்து தர்மத்தில் நித்திய கர்மாக்கள் உயர்த்திப் பேசப்படுவதால், நித்திய கர்மாக்களை குறை

வற நிறைவேற்றுவதைத்தான் முதல் கடமையாகக் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன்!

கே: சுவாமி! மதத்தலைவர்கள் அரசியல் விவகாரங்களில் பங்கேற்கலாமா! தங்கள் கருத்து யாது!

ப: இக்காலத்தில் மதமும் அரசியலும் வேறுபட்ட நிலையில் இருக்கின்றன. சர்க்காரும் மதச்சார்பற்றதாக அமைந்திருக்கிறது. மதம் தழைத்தோங்க வேண்டுமென்றால் மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடாது மத வளர்ச்சிக்கும் மக்களிடையே நன்னெறிகள் வளரவும் பாடுபட வேண்டும். அரசியல் மாறக்கூடியது; ஆனால் மதம் என்றும் ஒன்றே!

கே; சுவாமி! மற்ற மதத்தினர்கள் போன்று சட்டைகள் அணிந்துகொண்டு நாமும் தெய்வ வழிபாட்டுக்கு நம் திருக்கோயில்களுக்குச் செல்வது முறைதானா?

ப;- வட தேசங்களில் இருக்கும் பக்தர்கள் பலவிதமான ஆடைகளை அணிந்து கொண்டு திருக்கோவில்கள் சென்று ஆண்டவனைத் தொட்டு வழிபடுகிறார்கள். மற்ற மதத்தினரைப் போன்று நாமும் இறைவனை வழிபடுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். "ஆண்டவனுக்கு சமர்ப்பிக்க வேண்டியது தூய பக்தி நிரம்பிய உள்ளம் ஒன்றுதான்!

கே: பெண்களைப் பெற்றவர்களின் உள்ளத்தைக் கலங்க வைக்கும் 'வரதட்சிணை' பற்றி தங்கள் கருத்து யாது?

ப:- (இந்தக் கேள்வியைக் கேட்டதும் வயது ஆகியும் திருமண மாகாத பெண்களைப் பற்றிக் கூறி மிகவும் வருந்தினார்) பெண் வீட்டாருக்குத்தான் பிள்ளை வீட்டார் வரதட்சிணை செலுத்தவேண்டும்! "பொன் கொடுத்து பெண்ணைப் பெறு" என்று பெரியோர்கள் கூறிய மொழிக்கு இதுதான் பொருள்! நமது சாஸ்திரங்களில்

வரதட்சிணையைப் பற்றிய வாக்கியங்களே கிடையாது! வரதட்சிணைக்காக பெண்ணையும் பெண் வீட்டாரையும் துன்பத்திற்கு ஆளாக்குவது மகா பாபம்! வரதட்சிணை ஒழிப்புப் போராட்டம் நடத்த படித்த வாலிபர்கள் ஒரு இயக்கமே ஆரம்பிக்க வேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன். சர்க்காரும் பொதுமக்களும் இவ்வியக்கத்திற்கு ஆதரவு அளித்தால் வரதட்சிணை அரக்கனை அழித்து விடலாம்!

கே: சுவாமி! இந்துக்களில் ஒரு சிலர் அந்நிய மதத்தைத் தழுவி விடுகிறார்களே காரணம் இந்து மதத்திலிருக்கும் கட்டுப்பாடுகளாக இருக்குமோ?

ப:– பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய நம் இந்து மதம் (வைதீக மதம்) இன்று வரை மற்ற மதங்களுக்கு முன்னணியில் இருப்பதற்குக் காரணம் நம் மக்கள் சுதந்திரமாக தெய்வீக அறிவோடுவாழவேண்டுமென்ற பரந்த கட்டுப்பாடற்ற தன்மையேயாகும்! வறுமையின் காரணமாகவோ மறைமுக வற்புறுத்தலினாலோ அல்லது சாதகமான சூழ்நிலையிலோ அந்நிய மதத்தில் புகுந்த நம் மக்களின் மனம் இந்து மதத்தையே பற்றி நிற்கும்! உடல் அந்நிய மதம்! மனம் இந்து மதம்!
(சுவாமி சிரிக்கிறார்!)

கே; சுவாமி! தொன்றுதொட்டு நம் திருக்கோவில்களில் வடமொழியில் செய்யப்பட்டுவரும் அர்ச்சனைகள் நம் தமிழ் நாட்டில் தமிழிலும் செய்யப்பட்டு வருகின்றனவே; இது நல்ல முன்னேற்றம்தானே!

ப; (சற்று சிந்தனையிலாழ்ந்தார்) நீங்கள் கேட்ட வினா சற்று சர்ச்சைக்குரியதுதான் என்றாலும் என் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறேன். மற்ற மதத்தினர்கள் தங்கள் கோவிலுக்குச் சென்று வழிபடும்போது, பூசையை நடத்துபவர்கள் மதத்தின் மூலமொழியைத்தான் பயன் படுத்துவார்கள் என்று நான் அறிகிறேன். மொழி பெயர்த்து பூசைகளை நடத்துவதாக நான் கேள்விப்பட

வில்லை! கர்நாடகம், ஆந்திரம் ஒரிசா போன்ற வட பகுதிகளில் வடமொழியாகிய சமஸ்கிருதமே கோவில் களில் பழகப்பட்டு வருகிறது. சமஸ்கிருதம் தேவ பாஷையாகும். இறைவன் விரும்பும் பாஷையும் அது வே! எல்லா மொழிகளுக்கும் மூல பாஷையாகும். அர்ச்சனைகளில் கையாளப்படும் சமஸ்கிருதச் சொற்கள் வேதங்களிலிருந்து அருளாளர்களால் தொகுக்கப்பட் டவை. அர்ச்சனையில் வரும் ஒவ்வொரு சமஸ்கிருத எழுத்துக்கும் பல பொருள் கூறலாம். ஆகையால் மொழிபெயர்த்து அர்ச்சனை செய்வதைவிட மூலத்தைக் கொண்டே அர்ச்சனை செய்துவருவது சாலச் சிறந்த தாகும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

கே: இறைவனையே எக்காலும் ஆராதித்துவரும் அன்பர்கள் சிலர் அல்லல்களுக்கு ஆளாகி விடுகிறுர்களே! இதற்குக் காரணம் ஆண்டவனு சுவாமி!

ப: அன்பர்களின் அல்லல்களுக்கு காரணகர்த்தா ஆண்ட வன் இல்லை. அன்பர்களின் பூர்வசென்ம பாவங்களே காரணமாகும். பூர்வசென்மத்தில் அனுபவிக்காது தொ டர்ந்துவரும் பாவங்களும் புண்ணியங்களும் இப்பிறவி யைப் பற்றிவிடும். பாவங்கள் மிஞ்சியிருந்தால் அல்லல் களும் புண்ணியங்கள் எஞ்சியிருந்தால் நற்பலன்களும் இப்பிறவியைப் பற்றும். தான்செய்த புண்ணிய பாவத் திஞல் ஏற்படும் சுகதுக்கங்களை மனிதன் அனுபவித்தே தீர்க்கவேண்டும் இந்த நியதி சாதாரண அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் ஞானிகளுக்கும் பொருந்தும். அல்லல் களைக் கண்டு அஞ்சாது ஆண்டவனைசிக்கெனப் பிடித்து ஆராதித்து வந்தால் பெறுதற்கரிய பேறுகளைப் பெற லாம். மனத்தளர்ச்சி மனிதனை மங்க வைக்கும்! அடிக்க அடிக்கத் தங்கம் ஆண்டவனின் திருமுடிகளை அலங்கரிக்கும் தகுதியைப் பெறும்!

கே: பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் கூறும் அறிவுரை கள் யாது?

ப:- என்றே வாழ்ந்து அருள்பெற்ற துருவனையும், பிரகலாத னையும் சிவாஜியையும், விவேகானந்தரையும், திருஞான சம்பந்தர் போன்ற பெரியார்களை பற்றியும் இன்று பெரு மையாகப் பேசுகிறோம் என்றால் அதற்குக் காரணம் அக் குழந்தைகளை தகுதியான முறையில் பாதுகாத்து வளர்த்த பெற்றோர்கள்தான். அவர்களின் வழியை பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டும். ஆபாச பத்திரி கைகளைப் படிப்பதை நிறுத்த வேண்டும். சித்தத்தைக் கெடுக்கும் சினிமாக்களுக்கு போகக்கூடாது. குழந்தை களை அருகில் அமர்த்திக் கொண்டு நல்ல புராணக் கதை களைக் சொல்லவேண்டும் நீதிக் கதைகளைக் கூற வேண் டும். குழந்தைகளை கூட்டிக் கொண்டு கோவிலுக்குச் செல்ல வேண்டும். தெய்வீகக் காரியங்களில் குழந்தை களின் மனத்தைத் திருப்ப வேண்டும். தீர்க்க மாங்கல்ய பெற பெண்கள் மஞ்சள் நிறைந்த குங்குமம் அணிய வேண்டும். அவரவர்கள் குலாச்சாரத்தைப் பின்பற்றி திருவெண்ணீறு அல்லது திருநாமங்களை ஆண்கள் அணியவேண்டும்.

சுவாமிகளுக்கு வணக்கம் செலுத்தி விடைபெற்றேன். சுவாமி பாலானந்தர் தினமும் இருவேளையும் மக்கள் கூட்டத் தினிடையே அம்பாளுக்கு பூசை செய்கிறார். எல்லோரிடமும் சகஜமாகப் பழகுகிறார். ஞானனந்தகிரி சுவாமிகள் தபோவ னம், திருக்கோவிலூர் அல்லது சங்கராச்சாரியார் மடம், திரு வானைக் கோவில் திருச்சி அல்லது அடியேன் விலாசத்தில் சுவாமிகளோடு தொடர்பு கொண்டு அவர் நல்லாசிகளை யாவரும் பெறலாம்.

உ
சிவ சிவ
சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.